இன்றைய உதயனுடன்..!
புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்!
ஆசிரியர்: ஆ.விஜிந்தன்

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 254 | திங்கட்கிழமை | ஆடி 24 ஆம் நாள் 09 ஓகஸ்ட் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


# நாட்டின் நிலைமை மிக மோசமானால் முப்படையினரையும் களமிறக்குவோம்



## பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் திட்டவட்டம்

கொழும்பு, ஓகஸ்ட் 9

இலங்கையில் எதிர்வரும் நாள்களில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்குமாயின் சிகிச்சை நடவடிக்கைகளுக்கு உதவியளிப்பதற்காக முப்படையினர், சுகாதாரப் பிரிவில் ஓய்வுபெற்றுச் சென்ற அதிகாரிகள் மற்றும் தனியார் பிரிவு சுகாதார ஊழியர்கள் உள்ளிட்ட குழுவினரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

19

## வவுனியாவில் 39 தொற்றாளர்கள் கண்டறிவு

வவுனியா, ஓக. 9

தொற்றாளர்களுடன் தொடர்புடையோர், மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாற்றுச்

19

## உயிரிழப்பு 94 தொற்று 2,956

யாழ்ப்பாணம், ஓக. 9

இலங்கையில் நேற்று 2 ஆயிரத்து 956 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதேவேளை நேற்றுமுன்தினம்

19

## பருத்தித்துறையில் 'டெல்டா' திரிபு

யாழ்ப்பாணம், ஓக. 9

யாழ். மாவட்டத்தின் பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் டெல்டா திரிபு இனம் காணப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தின் வடமராட்சி பகுதிகளில் அண்

19

## நாட்டை முடக்க வேண்டாம்: மக்கள்தான் கோருகின்றனர்

### இராணுவத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 9

நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களும் டெல்டா தொற்றாளர்களும் அதிகரித்துள்ளமையை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். சாவு எண்ணிக்கையும் நாளாந்தம் அதிகரிக்கின்றது. ஆனால், நாட்டை முடக்க வேண்டாம்; நாங்கள் பொறுப்பாக நடந்துகொள்கின்றோம் என்று மக்கள் கூறுவதனாலேயே நாட்டை முடக்காது வைத்திருக்கின்றோம். இவ்வாறு கொரோ

19

## 6 மாதக் குழந்தை, தாய் கொலை 5 ஆண்டுகளின் பின் கணவன் கைது

வவுனியா, ஓக. 9

தாயையும் குழந்தையையும் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் அவருடைய கணவர் என்று கூறப்படும் நபர், 5 வருடங்க

19

'சீல்' வைக்கப்பட்ட

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் ஒருவருக்கு தொற்று உறுதி

யாழ்ப்பாணம், ஓக. 9

தொண்டைமனாறு செல்வச் சந்நிதியில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரமம் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் தனி

19

இரு வாரங்களில்

## இந்திய மீனவர்களால் ரூ. 2 கோடி இழப்பு

யாழ்ப்பாணம், ஓக. 9

இந்தியக் கடற்றொழிலாளர்களின் எல்லை தாண்டிய சட்டவிரோத தொழில்முறை காரணமாக தமது வாழ்வாதாரம் மோசமாகப் பாதிக்கப்பட்டு வருகின்றமையால், எந்த வழியிலேனும் இந்தியக் கடற்றொழிலாளர்களை கட்டுப்படுத்து

19

## தொற்றாளருடன் தொடர்புடையோருக்கு 3 - 5 நாள்களில் பி.சி.ஆர். சோதனை

### சந்திம ஜீவந்தர தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 9

கொரோனாத் தொற்றாளருடன் தொடர்புடைய முதல் நிலை தொற்றாளர்களுக்கு பி.சி.ஆர். சோதனை 5 தொடக்கம் 7 நாள்களில் மேற்கொள்ளப்படவேண்டும் என்ற நியமம் மாற்றப்பட்டு அது 3 தொடக்கம் 5

19

## சீனி, பருப்பு விலை அதிகரிப்பு எகிறுகிறது வாழ்கைச் செலவு

கொழும்பு, ஓக. 9

இறக்குமதி செய்யப்படும் வெள்ளைச் சீனி மற்றும் சிவப்புப் பருப்பு உள்ளிட்ட மேலும் சில பொருள்களின் விலை

19

## அமைச்சர் டக்ளஸ்க்கு வளைந்து கொடுக்கும் தனிமைப்படுத்தல் சட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 9

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியதாகத் தெரிவித்து பருத்தித்துறை சிவன் ஆலயம் சுகாதாரப் பிரிவினரால் தனிமைப்படுத்தப்பட்டிருந்தது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலையீட்டையடுத்து தனிமைப்படுத்தலிலிருந்து ஆலயத்தை சுகாதார அதிகாரிகள் விடுவித்துள்ளனர்.

இது தொடர்பில் கடற்றொழில் அமைச்சரின் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில்,

பருத்தித்துறை சிவன் ஆலய வருடாந்த திருவிழா நடைபெற்று வருகின்ற நிலையில், கடந்த

16



## பண்ணைக் கடலில் வீழ்ந்த இளைஞனைக் காணவில்லை

யாழ்ப்பாணம், ஓக. 9

யாழ்ப்பாணம் பண்ணை பாலத்தில் இருந்து கடலினுள் தவறி வீழ்ந்த இளைஞன் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளார். அவ

17

## 'போறணைகளில்' சடலங்களை தகனம் செய்யவேண்டி வரலாம்!

*கிழித்து தொங்கவிடுகிறார் முத்தெட்டுவ ஆனந்த தேரர்*

கொழும்பு, ஓக. 9

நாட்டில் கொரோனாத் தொற்று வேகமாக அதிகரித்து வருகின்றது. தொற்றால் உயிரிழப்பவர்களை தகனம் செய்வதற்

19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் இராசதானியிலுள்ள

# மரபுரிமைச் சின்னங்களை பாதுகாப்பது பற்றி ஆராய்வு



**யாழ்ப்பாணம், ஓக. 9**

**நல்லூர் இராசதானி மரபுரிமைச் சின்னங்களை பாதுகாப்பது தொடர்பில் நேரில் ஆராயப்பட்டுள்ளது.**



யாழ்ப்பாணம் மரபுரிமை மையத்தின் ஏற்பாட்டில் தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் அழைத்துவரப்பட்டு சங்கிலியன் அரண்மனை, அதன் நுழைவாயில், யமுனா ஏரி, மந்திரி மனை ஆகியவற்றை புனரமைப்பது தொடர்பில் ஆராயப்பட்டது.

தற்போது இவற்றை செய்துமுடிப்பதற்கான பூர்வாங்க பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. விரைவில் இவற்றுக்கான கட்டட வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு வெளிவிடுவதற்கு எதிர்பார்த்துள்ளோம். எமது மரபுரிமைகளை பாதுகாப்பதற்கு நாம் எடுக்கும் முயற்சிகளுக்கு எமது தமிழ் உணர்வாளர்கள் அனைவரினதும் பங்களிப்பை எதிர்பார்த்துள்ளோம் என்று ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மரபுரிமை மையத்துடனான இந்தச்சந்திப்பில் அதன் தலைவர் பேராசிரியர் புஷ்பரட்ணம், செயலாளரான மருத்துவபீட பதிவாளர் ரமேஷ், மாநகர முதல்வர் சட்டத்தரணி மணிவண்ணன், புனர்நிர்மாண அலுவலர் கபிலன், மாநகர சபை உறுப்பினர்களான பார்த்திபன், தனுயன் மற்றும் கண்டியில் இருந்து வருகை தந்த பட்டய கட்டட கலைஞர் ஹேரத், அளவை அளவையியலாளர் சரத் சத் குமார, தொல்லியலாளர் மைத்திரிபால, மூத்த புனர்நிர்மாண அலுவலர்களான பண்டாரநாயக்க, மெத்தானந்த ஆகியோர் கலந்துகொண்டனர். (து)

## மண்டையோடு வயலில் மீட்பு

வவுனியா, ஓக. 9

வவுனியா தாண்டிக்குளம் வயல் பகுதியிலிருந்து மனித மண்டை ஓடு ஒன்று நேற்று மீட்கப்பட்டது. குறித்த பகுதிக்குச் சென்றிருந்த சிலர், அதை அவதானித்து பொலிஸாருக்குத் தெரியப்படுத்தினர். பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (து-110)





# போலியான கருத்துக்களை திலீபன் எம்.பி. கூறுகின்றார்

## நகரசபைத் தவிசாளர் குற்றச்சாட்டு

வவுனியா, ஓக. 9

வவுனியா நகர அபிவிருத்தி தொடர்பில், நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் போலியான கருத்துக்களைக் கூறிவருகின்றார் என்று வவுனியா நகரசபைத் தவிசாளர் இ.கௌதமன் தெரிவித்தார்.

அவர் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் மேலும் தெரிவித்ததாவது:

நூறு நகரங்களின் அபிவிருத்தி தொடர்பாக தெளிவான விளக்கம் ஒன்றை அண்மையில் வழங்கியிருந்தேன். இது ஒரு வேடிக்கையான கருத்து என்று நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன் கூறியிருக்கின்றார். அதற்குரிய நிதியை ஒதுக்குவதற்கு தாங்களே முயற்சிசெய்தோம் என்றும் போலியான கருத்தைக் கூறியுள்ளார்.

இந்தத் திட்டம் ஒரு வருடத்துக்கு முன்பாகவே ஆரம்பிக்கப்பட்டிருந்தது. நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள் மற்றும் மாவட்டச்செயலர் உள்ளிட்ட தரப்பினர், இது தொடர்பில் களப் பயணம் மேற்கொண்டு அவதானித்திருந்தனர். நகர அபிவிருத்தி தொடர்பில் நகரசபைக் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இதனை யார் செய்தார்கள் என்பது முக்கியமான விடயமல்ல. அபிவிருத்தித் திட்டங்கள் யாரால் வந்திருந்தாலும் மக்களின் நோக்கம் நிறைவேற வேண்டும் என்ற ஒரே எண்ணத்தின் அடிப்படையிலேயே நாம் செயற்பட்டுவருகின்றோம்.

இந்தத் திட்டத்துக்குரிய நிதி, நகர அபிவிருத்தி அதிகாரசபை மூலமாக வழங்கப்பட்டிருந்தது. மாறாக அரசியல்வாதிகளின் தனிப்பட்ட கோரிக்கைக்காக இந்த நிதி வழங்கப்படவில்லை.

வடக்கில் 46 ஆயிரம் பேருக்கு தாம் வேலைவாய்ப்பு வழங்கியுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார். இவையெல்லாம் உங்கள் கடமை. அதனை சொல்லிக்காட்டி விளம்பரம் தேட வேண்டிய அவசியம் இல்லை. அதற்காகவே மக்கள் உங்களுக்கு வாக்களித்து நாடாளுமன்றுக்கு அனுப்பியிருக்கின்றார்கள்.

நான் அதைச்செய்தேன், இதைச்சேய்தேன் என்று எதிர்கால அரசியலுக்காக கருத்துப்பகிர்வது அழகான விடயமல்ல. அதையும்விட போலியான கருத்துக்களை சொல்பவர்களை மக்கள் இனம்காணவேண்டும். என்றார். (து-110)

## பிதிர்க்கடன் செலுத்துவதற்காக சென்றவர்களுக்கு அன்டிஜென்

யாழ்ப்பாணம், ஓக. 9

ஆடி அமாவாசை தினமான நேற்று, யாழ். கீரிமலை பகுதியில் பிதிர்க்கடன் செலுத்த அதிகளவான மக்கள் கூடிய நிலையில், அவர்களுக்கு அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளுக்கு அமைவாக கோவில்களுக்கு வெளியே அதிகளவான பக்தர்கள் கூடுவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில், பக்தர்கள் ஒன்றுகூடியதால் அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. (து-27)

# மன்னார் வரும் யாசகர்களை கட்டுப்படுத்தல் வேண்டும்

## மாவட்டச் செயலரிடம் கோரிக்கை



தலைமன்னார், ஓக. 9

போக்குவரத்து சேவைகள் நடைமுறைகளுக்கு வரத் தொடங்கியதும் மன்னார் பகுதிக்கு மீண்டும் வெளி மாவட்டங்களிலிருந்து யாசகர்கள் (பிச்சைக்காரர்) வருகை அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. இதனால் கொரோனா அச்சுறுத்தலும் காணப்படுவதாக கொரோனா தொடர்பான கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கடந்த வாரம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற குறித்த கூட்டத்தில் மேலும் குறிப்பிடப்பட்டதாவது:

முன்னர், வெளிமாவட்டங்களிலிருந்து மன்னாருக்கு யாசகர்கள் வருகை காணப்பட்டபோதும் அன்று எடுக்கப்பட்ட நடவடிக்கையைத் தொடர்ந்து அவை கட்டுப்படுத்தப்பட்டது. தற்பொழுது பயணக்கட்டுப்பாடு நீக்கப்பட்டதைத் தொடர்ந்து மீண்டும் வவுனியா ஊடாக வெளிமாவட்டங்களைச் சேர்ந்த யாசகர்கள் மன்னாருக்கு வருகின்றமை அகரித்துள்ளது.

அவர்கள் போக்குவரத்து சேவைகளில் பயணிக்கின்றபோது தாங்கள் யாசகர்கள் என காண்பிக்காத வகையில் பயணிக்கின்றனர். மன்னாருக்கு வந்ததும் தங்களின் நடை உடை பாவனைகளை மாற்றி, தொழில் புரிகின்றனர். எனவே, இத்தகைய நபர்களின் வருகையை கட்டுப்படுத்துவதில் தீவிர கவனம் செலுத்தவேண்டும் என்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (து-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே பெட்டிக்குள் இரண்டு பிணங்கள்

## கொரோனா இறப்பு விவரங்கள் மறைப்பு என்று குற்றச்சாட்டு



**கொழும்பு, ஓக. 9**
**கொரோனாவால் ஏற்படும் இறப்புக்கள் தொடர்பில் அரசால் உண்மையான தகவல் வெளிப்படுத்தப்பட வில்லை என்று அரச தாதியர் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னபிரிய குற்றஞ்சாட்டியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் தற்போது கொரோனா இறப்புக்கள் அதிகரித்துள்ளன. 97, 98 என எண்ணிக்கை வெளிப்படுத்தப்பட்டு வந்தாலும் அவை உண்மையான தரவுகள் அல்ல. நான் சுகாதாரத்துறை ஊழியர் என்பதால் எனக்கு உண்மை நிலவரம் தெரியும். பிணவறையில் ஒரு பெட்டிக்குள் இரண்டு பிணங்கள் போடப்பட்டுள்ளன. வேறு சில இடங்களிலும் நிலைமை அவ்வாறு தான். அதுமட்டுமல்ல மருத்துவமனைகள் நிரம்பி வழிகின்றன. தொற்றாளர்களை மருத்துவமனைக்கு வெளியில் தங்கவைக்க வேண்டிய நிலை கூட ஏற்பட்டுள்ளது. குறிப்பாக சுகாதாரத் துறையினரும் வைரஸ் தொற்றுக்கு இலக்காகும் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

பேராதனை மருத்துவமனையில் பாதுகாப்புப் பிரிவில் 37 பேருக்கு கொரோனா, யாழ். தாதியர் கல்லூரியில் 30 பேருக்கு கொரோனா. இதனால் அந்தக் கல்லூரி மூடப்பட்டுள்ளது. ராகம, களுபோவில, கராபிடிய உட்பட முக்கிய மருத்துவமனைகளில் இடப்பற்றாக்குறை நிலவுகின்றது.

இந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே இறப்புக்கான முழுப் பொறுப்பையும் அரசு ஏற்க வேண்டும். கொரோனா ஒழிப்பு வேலைத்திட்டம் தோல்வி என்பதாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது- என்றார். (4,44)



## உயிரிழப்பை தடுக்க முடக்கமே ஒரே வழி

கொழும்பு, ஓக. 9
கொரோனாவால் அதிகரிக்கும் உயிரிழப்புக்களைத் தடுக்க, இரு வார காலத்துக்கு நாட்டை முடக்குவதே தற்போதுள்ள ஒரே வழி என்று ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் சமூக மருத்துவத் துறை பேராசிரியர் சுனெத் அகம்பொடி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இறப்புகளின் எண்ணிக்கையைக் குறைக்க, அனைத்து நோயாளர்களையும் மருத்துவமனைகளில் சேர்ப்பதைத் துரிதப்படுத்த வேண்டும். வீட்டுச் சிகிச்சை, நோயாளிகளின் போக்குவரத்து மற்றும் அவசர சேவைகள் போன்ற சேவைகளை வழங்க ஒரு சரியான பொறிமுறையை உருவாக்க வேண்டும். இல்லையெனில் ஒரு நாளில் 200 தொடக்கம் 300 இறப்புக்கள் பதிவாகக்கூடும். என்றார். (4)

## இலங்கையில் இந்த ஆண்டிறுதிக்குள் 23,000 உயிரிழப்புக்கள்

### அமெரிக்கா தகவல்

கொழும்பு, ஓக. 9
இலங்கையில் கொரோனாத் தொற்றால் இந்த ஆண்டு இறுதிக்குள் 23 ஆயிரம் இறப்புக்கள் நிகழக்கூடும் என்று அமெரிக்காவின் வொஷிங்டன் பல்கலைக்கழகம் ஆருடம் வெளியிட்டுள்ளது.



இலங்கையில் நாளாந்தம் 90க்கும் மேற்பட்டோர் கொரோனாவால் உயிரிழக்கும் நிலையில், இது தொடர்பில் அறிக்கை வெளியிட்டுள்ள பல்கலைக்கழகம், அடுத்த வாரமாளவில், 2 ஆயிரம் இறப்புக்கள் பதிவாகலாம். எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி வரை இலங்கையில் 12 ஆயிரம் குறைந்தபட்ச இறப்புக்கள் நிகழக்கூடும் என்று குறிப்பிட்டுள்ளது. (4)

## கைது 118

கொழும்பு, ஓக. 9
தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறினர் என்ற குற்றச்சாட்டில் நேற்றும் 118 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் மேல் மாகாணத்திலிருந்து வெளியேறும் மற்றும் மேல் மாகாணத்துக்குள் வாகனங்கள் பிரவேசிக்கின்ற 13 இடங்களில் 3 ஆயிரத்து 264 வாகனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போது மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை மீறி, மேல் மாகாணத்திலிருந்து வெளியேற அல்லது மேல் மாகாணத்துக்குள் பிரவேசிக்க முற்பட்ட 33 வாகனங்கள் திருப்பி அனுப்பப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (4)

## நாட்டு மக்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி

### அரசு ஆலோசனை

கொழும்பு, ஓக. 9
நாட்டு மக்களுக்கு கொரோனாத் தடுப்பூசியின் மூன்றாம் டோஸ் அல்லது பூஸ்டர் தடுப்பூசி செலுத்துவது தொடர்பில் அரசு கவனம் செலுத்தியுள்ளது என்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

ஒரு சில நாடுகள் பூஸ்டர் தடுப்பூசியைச் செலுத்துகின்றன. எங்கள் நாட்டுக்கும் இது வேண்டும் என்றால் நிச்சயம் அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜனாதிபதி தெளிவுபடுத்தியுள்ளார். இதற்குத் தேவையான அளவைப் பெற்றுக் கொள்ள உடனடியாக கோரிக்கை விடுக்குமாறும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 93 வீத மக்களுக்கு முதல் டோஸ் கொடுக்கப்பட்டுள்ளது. 23 வீதம் பேருக்கு இரண்டாவது டோஸ் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4)



## புகைப்பிடிப்போருக்கு கொரோனா தொற்றும்



கொழும்பு,ஓக.9
புகைப்பிடித்தல் மற்றும் மதுபானம் அருந்துவோருக்கு கொரோனாத் தொற்று ஏற்படும் வீதம் அதிகரித்துள்ளது என்று சுகாதார அமைச்சின் கொவிட்19 தொடர்பான பிரதான இணைப்பாளரும், சுகாதார சேவைகள் தொழில்நுட்பப் பிரிவின் பணிப்பாளருமான மருத்துவர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி குறைவடையும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் நாளாந்தம் 16 லட்சத்துக்கும் மேற்பட்டோர் புகைப்பிடித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர் என்று மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையத்தின் தரவுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நாளாந்தம் 15 வயதுக்குக் குறைவான சுமார் 4 ஆயிரம் சிறுவர்கள் புகைபிடித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் என்றும் தெரியவந்துள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வு கிடைக்காவிடில் போராட்டம் தொடரும்

## ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

**கொழும்பு, ஓக. 9**

**சம்பளப் பிரச்சினை உட்பட எம்மால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளுக்கு இன்று நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் உரிய தீர்வு முன்மொழியப்படாவிடின், தொழிற்சங்க நடவடிக்கை தொடரும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாடசாலைகள் திறக்கப்படாத நிலையிலும் சேவைக்கு வருமாறு ஆசிரியர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அவ்வாறு வராவிடின் அது விடுமுறையாகவே கருதப்படும் எனவும் கூறப்பட்டது.

அதன்பின்னர் பாடசாலைக்கு வர வேண்டியதில்லை, வீட்டிலிருந்தே வேலை செய்யலாம் என்று கல்வி அமைச்சின் செயலாளர் கடிதம் அனுப்புகின்றார்.

ஒன்லைன் கற்பித்தலில் ஈடுபட மாட்டோம் என்று கல்வி அமைச்சின் செயலாளருக்கு நாம் அதிகார பூர்வமாக அறிவித்துள்ளோம். இது தெரிந்தும், ஒன்லைன் கல்வி நடவடிக்கையை முன்னெடுக்குமாறு மீண்டும் மீண்டும் கோரிக்கை விடுக்கப்படுகின்றது. நாம் கற்பித்தலில் ஈடுபடுவதற்குத் தயாராகவே இருக்கின்றோம். ஆனால் எமது பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். அமைச்சரவைக் கூட்டத்தில் உரிய தீர்வு வழங்கப்படாவிடின் தொழிற்சங்கப் போராட்டம் தொடரும். -என்றார். (ம-4,44)

# போராட்டத்தை கைவிட மாட்டோம்

## சோசலிசக் கட்சி அறிவிப்பு

கொழும்பு, ஓக. 9

கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக சட்டவரைவுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டுள்ள போராட்டத்தை ஒருபோதும் கைவிடப் போவதில்லை என்று முன்னிலை சோசலிசக் கட்சியின் பிரசார செயலாளர் புபுது ஜாகொட தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசின் பொறுப்பற்ற செயற்பாட்டைக் கண்டித்து மக்கள் வீதிக்கிறங்கி போராடும் நிலைமை ஏற்பட்டுள்ளது. கொரோனாத் தொற்றால் சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்களுக்கு அமையவே போராட்டத்தில் ஈடுப்பட்டோம். பாதுகாப்புத் தரப்பினரே போராட்டத்தை அமைதியற்றதாக மாற்றினர்.

நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக சட்டவரைவுக்கு பொது மக்கள் மத்தியில் எழுந்த கடுமையான எதிர்ப்பின் காரணமாகவே அரசு சட்டவரைவு மீதான வாக்கெடுப்பைப் பிற்போட்டுள்ளது.

போராட்டங்களை முடக்கி சட்டவரைவை இரகசியமான முறையில் நிறைவேற்ற அரசு முயற்சிக்கின்றது. தொழிற்சங்கத் தலைவர்களையும், உறுப்பினர்களையும் கைது செய்வதால் ஒரு போதும் போராட்டத்தைக் கைவிட மாட்டோம். தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும். -என்றார். (ம-4)

# கொழும்பில் மீண்டும் குண்டுத் தாக்குதலா?

## உண்மையில்லை என்று பாதுகாப்புத் தரப்பினர் அறிவிப்பு

கொழும்பு, ஓக. 9

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெறக்கூடும் என்று சமூக வலைத்தளங்களில் பரவிவரும் தகவல்களில், எந்தவித உண்மைத் தன்மையும் இல்லை என்று இராணுவம், மற்றும் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

மிரிஹானை, நுகேகொடை, கல்கிஸை, தெஹிவளை மற்றும் பம்பலபிட்டி ஆகிய பகுதிகளை அண்மித்து வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெறலாம் என்று மக்களை அச்சமூட்டும் வகையில் குரல் பதிவொன்று சமூக வலைத்தளங்களில் பரவி வருகின்றது.

இதற்குப் பதிலளித்துள்ள இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா மற்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண ஆகியோர், குறித்த தகவல் பொய்யானது என்று உறுதியளித்துள்ளனர்.

2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களைத் தொடர்ந்து இந்தத் தகவல் பகிரப்பட்டிருந்தது. அதே தகவல் மீள பகிரப்பட்டு வருகின்றது.

அதனால் மக்கள் வீண் அச்சம் கொள்ளத் தேவை இல்லை. தகவல் முற்றிலும் பொய்யானது. இது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான போலியான விடயங்களைப் பகிர்வோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ம-4)

# வெளிநாட்டவர்களுக்கு விசாக்காலம் நீடிப்பு



கொழும்பு, ஓக. 9

இலங்கையில் தங்கியுள்ள வெளிநாட்டவர்களின் அனைத்து விசாக் காலங்களும் மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி வரை காலம் நீடிக்கப்பட்டுள்ளது என்று குடிவரவு, குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது. (ம-4)

# இஸ்ரேலில் வேலைவாய்ப்பு

கொழும்பு, ஓக. 9

500 இலங்கைத் தொழிலாளர்களுக்கு இஸ்ரேலில் வேலை வாய்ப்புகளுக்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்று கைத்தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பத்திரிகைகளில் விளம்பரமொன்று வெளியிடப்பட்டுள்ளது. தகுதியான தொழிலாளர்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

இதேவேளை, கொரிய அரசு இலங்கைக்கு 4 ஆயிரத்து 500 வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை வழங்கியுள்ளது. தற்போதைய தொற்று நோய் காரணமாக, கொரிய அரசு வெளிநாட்டவர்கள் வருகைக்கு முற்றாக தடை விதித்துள்ளது.

இந்தத் தடை நீக்கப்பட்டதும் இலங்கைத் தொழிலாளர்களை கொரியாவுக்கு வேலை வாய்ப்புகளுக்காக அனுப்ப முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

### ஏப்.21 தாக்குதல்

# விடுதலையானவர்கள் மீது மீண்டும் விசாரணை!

கொழும்பு, ஓக. 9

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. கடந்த நல்லாட்சி அரசின் காலத்தில் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டவர்களை மீண்டும் கைது செய்யப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்ணான்டோ சி.ஐ.டிக்கு விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டால், மருத்துவமனைக்குச் சென்று படுத்துக் கொள்கின்றார். அவ்வாறானவர்கள் விடும் சவால்களுக்கு முகங்கொடுக்க நாம் தயாரில்லை. இந்த விசாரணைகளில் நாம் தொடர்புபடவில்லை. அதே போன்று தாக்குதலுக்கும் எமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. குற்றப் புலனாய்வுத் துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஹரின் பெர்ணான்டோ இந்த விசாரணைகளுடன் தொடர்புடையவராவார். அதனால் அவர் விவாதத்துக்குச் செல்ல வேண்டுமென்றால் சி.ஐ.டி அதிகாரிகளுடன் தான் செல்ல வேண்டும். எம்முடன் அல்ல. விசாரணைகள் என்பது அரசியல் கடமையல்ல. இது பொலிஸாரின் கடமையாகும் என்பதை அவர் புரிந்துக்கொள்ள வேண்டும். அதேபோன்று நாட்டில் பல்வேறு தரப்பினர் ஆர்ப்பாட்டங்களை நடத்துகின்றனர். இவ்வாறான ஆர்ப்பாட்டங்களால் பொலிஸ் அதிகாரியொருவர் விரல்கள் இரண்டையும் இழந்துள்ளார். ஆனால் எதிர்க்கட்சியினர் இதுவரையில் இந்த விடயம் குறித்து கண்டனத்தை வெளியிடவோ, கவலை வெளியிடவோ இல்லை.

நல்லாட்சி அரசின் காலத்தில் நீர் பிரயோகம், கண்ணீர்ப் புகைப் பிரயோகம், தடியடிப் பிரயோகம் என்பவை நடத்தப்பட்டன. ஆனால் நாங்கள் ஒரு ஆசிரியர் மீதும் கைவைத்ததில்லை, கைவைக்கப் போவதும் இல்லை. -என்றார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் கோவில் சூழலில் இரு வியாபாரிகளுக்கு தொற்று




யாழ்ப்பாணம், ஓக. 9


வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் கோவில் வருடாந்த பெருந்திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமான நிலையில், கோவில் சூழலில் கச்சான் வியாபாரிகள் உட்பட கடை நடத்துநர்கள் 36 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் இரண்டு பேருக்கு கொவிட்-19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதனையடுத்து தொற்றாளர்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணியவர்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் கோவில் சூழலிலுள்ள கடை உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் திருவிழாவுக்கு முன்னர் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளவேண்டும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

அதனடிப்படையிலேயே நேற்று முன்தினம் 36 பேரிடம் பி.சி.ஆர். மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன. அவர்களில் இருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதேவேளை, கோவிலுடன் தொடர்புடைய மேலும் 75 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 25 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு போதுமானதாக இல்லை என்று அறிக்கையிடப்பட்டுள்ளதாக சுகாதாரத் தரப்பினர் தெரிவித்தனர். (த-26)



## கரைச்சி புளியம்பொக்கனை நாகதம்பிரானுக்கு நேற்றுமுன்தினம் தேர்

கிளிநொச்சி, ஓக. 9

வரலாற்றுச் சிறப்புமிக்க கரைச்சி புளியம்பொக்கனை நாகதம்பிரான் கோவில், வருடாந்த பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக மக்கள் எவருமின்றி நிர்வாக உறுப்பினர்கள் சிலருடன் தேர்த்திருவிழா நடைபெற்றது. (த-113)

## ஆடி அமாவாசையான நேற்று கெருடமடுவில் பிதிர்க்கடன்

முல்லைத்தீவு, ஓக. 9

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கெருடமடு பிள்ளையார் கோவிலில் பிதிர்க்கடன் நிறைவேற்றும் விரதம் நேற்றுச் சிறப்பாக நடைபெற்றது.

வரலாற்றுத் தொன்மைவாய்ந்த கெருடமடு பிள்ளையார் கோவிலில், தொன்றுதொட்டு பொதுமக்கள், இவ்வுலகை நீத்த தமது மூதாதையர்களுக்கு பிதிர்க்கடன் நிறைவேற்றிவருவது வழமை. அதன்படி ஆடி அமாவாசை நாளான நேற்றும் இந்த விரதம் சிறப்பாக கடைப்பிடிக்கப்பட்டது. (த-19)

## கிளிநொச்சி விளாவோடையில் அகழ்வுப் பணிகள் முடிவுக்கு வந்தன

கிளிநொச்சி, ஓக. 9

கிளிநொச்சியில் இராணுவ சீருடையுடன் மனித எச்சங்கள் மீட்கப்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணி நிறைவுசெய்யப்பட்டது.

கிளிநொச்சி பரந்தன் விளாவோடை வயல் பகுதியிலிருந்து இராணுவ சீருடையுடன் மனித எச்சங்கள் கடந்த வியாழக்கிழமை அடையாளம் காணப்பட்டன.

இந்நிலையில், குறித்த பகுதியில் சட்ட மருத்துவ அதிகாரி மற்றும் தடயவியல் பொலிஸார் இணைந்து தடயங்களைச் சேகரிப்பதில் ஈடுபட்டிருந்தனர்.

அகழ்வுப் பணிகள் நேற்றும் முன்னெடுக்கப்பட்டது. அதன்போது, கைக்குண்டு, தொடர்பாடல் சாதனம், இரண்டு தலைக்கவசங்கள், ரவைக்கூடுகள், உடைகள் மற்றும் இராணுவத்தினர் பயன்படுத்தும் உணவுப் பொதிகள் உள்ளிட்ட பொருள்களின் எச்சங்களுடன், மனித எச்சங்களும் மீட்கப்பட்டன.

இரண்டு நாள்களாக மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது இவை மீட்கப்பட்டுள்ள நிலையில், பணி நிறைவுக்கு கொண்டுவரப்பட்டது. மீட்கப்பட்டவை அனைத்தும் 25 ஆண்டுகள் பழமையானவையாக இருக்கலாம் எனவும், மனித எச்சங்களுடன் மீட்கப்பட்ட தடயப்பொருள்கள் அனைத்து 97ஆம் ஆண்டுக்கு முற்பட்ட திகதியிடப்பட்ட பொருள்களாகவே காணப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அங்கு மீட்கப்பட்ட மனித எச்சங்கள் மற்றும் தடயப்பொருள்கள் அனைத்தும் இன்று திங்கட்கிழமை கிளிநொச்சி நீதிமன்றில் பாரப்படுத்தப்படவுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-113)




## பளை விபத்தில் மூவர் காயம்


பளை, ஓக. 9

பளை முல்லையடி பகுதியில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட வீதிவிபத்தில் மூவர் படுகாயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஏ9 வீதியூடாக கிளிநொச்சி நோக்கி இரு பெண்கள் பயணித்த மோட்டார்சைக்கிளை, அதன் பின்பாகப் பிறிதொரு மோட்டார்சைக்கிளில் சென்றுகொண்டிருந்தவர் மோதியதில் விபத்து இடம்பெற்றது. அதன்போதே மூவரும் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த மூவரும், பளை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அவர்களில் ஒரு பெண்மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டு பின்னர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். விபத்து தொடர்பில் பளை பொலிஸார் விசாரணை மேற்கொள்கின்றனர். (த-113)

## சீவல் வெற்றிலைச் சுருள் 50 ரூபாவாக அதிகரிப்பு



சாவகச்சேரி, ஓக. 9

யாழ்ப்பாண மாவட்ட சந்தைகளில் சீவல் வெற்றிலைச் சுருளின் விலை 50 ரூபாவாக அதிகரித்துள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை காலமும் 30 ரூபாவாக விற்கப்பட்டுவந்த நிலையில், நேற்று முன்தினம் தொடக்கம் குறித்த விலை அதிகரிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக வெற்றிலை வியாபாரிகளிடம் கேட்டபோது, வெற்றிலை, சீவல் மற்றும் புகையிலை போன்றவற்றின் விலை திடீரென அதிகரித்துள்ளது.

ஒரு கிலோ ஆயிரம் ரூபாவரை விற்பனை செய்யப்பட்ட பாக்கு ஆயிரத்து 200 ரூபாவாகவும் ஒரு புகையிலை 50 ரூபா தொடக்கம் 150 ரூபாவாகவும் கொள்வனவு செய்வதால் சீவல் வெற்றிலைச் சுருளின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தனர். (த-9)



## யாழ்ப்பாணத்திலிருந்து 9 கிலோ கஞ்சா கடத்தல்

### மூவர் கைது

கொழும்பு, ஓக. 9

யாழ்ப்பாணத்திலிருந்து கடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்படும், 9 கிலோக் கிராம் கஞ்சாவுடன் சந்தேக நபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.


கைது செய்யப்பட்ட மூவரில் ஒருவர் பூகொட பிரதேசத்தைச் சேர்ந்தவர். அவர் குறித்த பிரதேசத்தில் கஞ்சா வர்த்தகத்தில் ஈடுபட்டு வருபவர். இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட கஞ்சா யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளது.

குறித்த சந்தேக நபருக்கு கஞ்சா வழங்கினார் என்ற குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஏனைய இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பில் கம்பஹா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெல்டா தொற்றாளர்களாக சமூகத்தில் பலர் இருப்பர்!

## சுகாதாரத் திணைக்களம் தகவல்



**கொழும்பு, ஓக. 9**

**சிறி ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தால் முன்னெடுக்கப்படும் மரபணுப் பரிசோதனை முடிவுகளைவிட, டெல்டா வைரஸ் தொற்றாளர்கள் சமூகத்தில் இருக்கக் கூடும் என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் தற்போது அதிகளவான தொற்றாளர்கள் இனங்காணப்படுவது மாத்திரமின்றி, அவர்களில் பெருமளவானோர் தீவிரமான அறிகுறிகளை உடையவர்களாகவும், ஒட்சிசன் தேவையுடையவர்களாகவும் உள்ளனர்.

இதனை பாரதூரமான வகையில் கவனத்தில் கொள்ள வேண்டும். நாட்டில் தற்போது கட்டுப்படுத்த முடியாத நிலைமை ஏற்படுவதை தடுப்பதற்கு சகலரும் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

சகல மருத்துவமனைகளிலும் தேவைக்கேற்ப தொற்றாளர்களுக்காக ஒதுக்கப்படும் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு பணிப்பாளர்களுக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் நிலைமையைக் கட்டுப்படுத்த மக்களின் ஒத்துழைப்பு அத்தியாவசியமானது.

இரு கட்டங்களாகவும் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதால் மாத்திரம் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்திவிட முடியாது. மாறாக தடுப்பூசியைப் பெற்றவர்கள் தொற்றுக்கு உள்ளான போதிலும் தீவிர நிலைமைக்குச் செல்வதையும், ஏனையோருக்கு பரப்பும் வேகத்தைக் குறைக்கவும் முடியும்.

எனவே இரு கட்டங்களாக தடுப்பூசி ஏற்றிக் கொண்டவர்களாக இருந்தாலும் தேவையற்ற போக்குவரத்துக்களைத் தவிர்க்க வேண்டும். அறிகுறியற்ற அல்லது தீவிர நிலைமையை அடையாத தொற்றாளர்களுக்கு வீடுகளில் சிகிச்சையளிக்கும் முறைமை தொடர்ந்தும் பின்பற்றப்பட்டு வருகின்றது.

வீட்டில் அதற்கான வசதி இல்லையெனில் அவர்கள் மருத்துவமனைகளில் அல்லது இடைநிலை சிகிச்சை நிலையங்களில் சேர்க்கப்படுவர். இவ்வாறான நிலைமையில் நாடு முடக்கப்படுமா என்பது தொடர்பில் அரசே தீர்மானிக்கும். என்றார். (4)



# போக்குவரத்து பயணிகளுக்கு தடுப்பூசிகள் கட்டாயமில்லை!

கொழும்பு. ஓக. 9

பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தும் பயணிகள் கட்டாயம் தடுப்பூசி பெற்றிருக்க வேண்டும் என்ற தீர்மானம் இதுவரை எடுக்கப்படவில்லை என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் இந்த நடைமுறை சாத்தியப்படலாம். ஆனால் தற்போது இது சாத்தியமான விடயமல்ல. பரபரப்பாக இயங்கும் இந்தச் சேவையின் போது அனைவரிடமும் தடுப்பூசிக்கான சான்றிதழைப் பரிசோதனை செய்வதென்பது இயலாத காரியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4)

# ஈழஅகதிகள் முகாமுக்குள் ஊடுருவியது கொரோனா

கொழும்பு, ஓக. 9

கன்னியாகுமரி அருகே கொட்டாரம் பேரூராட்சிக்கு உட்பட்ட பெருமாள்புரத்தில் உள்ள இலங்கை அகதிகள் முகாமில், பலருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த முகாமில் 191 குடும்பங்களைச் சேர்ந்த 552 பேர் வசித்து வருகின்றனர். இவர்களில் 6 பேருக்கு அண்மையில் கொரோனாத் தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அதனையடுத்து அவர்கள் கோட்டாரில் உள்ள மாவட்ட சித்த மருத்துவமனை சிகிச்சை மையத்தில் சேர்க்கப்பட்டனர்.

இவர்களுடன் தொடர்பில் இருந்த 50 பேருக்கு பரிசோதனை நடத்தப்பட்டது. அதில் மேலும் 3 பேருக்கு கொரோனாத் தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதனையடுத்து குறித்த அகதிகள் முகாம் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. (4)

# கொரோனாவால் ஆதிவாசி இறப்பு

கொழும்பு, ஓக. 9

இலங்கையில் முதன்முறையாக கொரோனாத் தொற்று காரணமாக ஆதிவாசி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தம்பானே பிரதேசத்தைச் சேர்ந்த ஆதிவாசி ஒருவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் கொரோனாத் தொற்றுக் காரணமாக பண்டாரவளை மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (4)

## கொழும்பில்

# 19.3 சதவீதமானோருக்கு டெல்டா வைரஸ்

கொழும்பு, ஓக. 9

கொழும்பில் ஜூலை மாதம் முதலாம் வாரத்தில் முன்னெடுக்கப்பட்ட மரபணுவின் ஒழுங்கமைப்பை அறியும் பரிசோதனையில் 19.3 வீதமானவர்களுக்கு டெல்டா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எனினும் ஜூலை மாதம் இறுதி வாரத்தில் 75 வீதம் வரை உயர்வடைந்துள்ளது என்று சிறிஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் மூலக்கூறு மற்றும் மரபணு ஆய்வுப் பிரிவின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார். நாடளாவிய ரீதியில் டெல்டா வைரஸ் நிலைமையைக் கண்டறிவதற்காக எழுமாறாக மரபணுவின் ஒழுங்கமைப்பை அறியும் பரிசோதனையை முன்னெடுப்பதற்கான மாதிரிகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இது குறித்த அறிக்கையை விரைவில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் கையளிக்கவுள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4)



# மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்தை முடக்க முடியாது

## இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 9

பொதுப் போக்குவரத்துச் சேவையில் சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் முழுமையாகப் பின்பற்றப்படுகின்றன. இது தொடர்பில் கண்காணிக்க பாதுகாப்புத் தரப்பினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். எனவே பொதுமக்களும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்தை முடக்குவது இனியும் பயனற்றது என்று போக்குவரத்து மற்றும் சமுதாய சேவைகள் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அனைத்து மாகாணங்களிலும் வைரஸ் தாக்கம் செலுத்தியுள்ளது. அதனால் அனைத்து சவால்களையும் வெற்றி கொள்ள வேண்டிய நிலை காணப்படுகின்றது. மாகாணங்களுக்கிடையிலான பொதுப் போக்குவரத்துச் சேவையை முடக்கினால் பொதுமக்கள் பெருமளவில் பாதிக்கப்படுவர்.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் பொதுப் போக்குவரத்துச் சேவை ஆபத்தானதாகவே காணப்படுகின்றது. கடந்த காலங்களில் இடம்பெற்ற ஒரு சில பொறுப்பற்ற செயற்பாடுகளின் காரணமாக வைரஸ் தாக்கம் மீண்டும் தீவிரமடைந்துள்ளது. அரச ஊழியர்கள் காலை மற்றும் மாலை வேளைகளில் சேவைக்கு சமூகமளிக்கும் நேரத்தை மாற்றியமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது பொதுப் போக்குவரத்துச் சேவையைப் பயன்படுத்தும் பயணிகளும் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்துக்காக 18 ஆயிரம் தனியார் பஸ்களும், 4 ஆயிரத்து 500 அரச பஸ்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. ஆகவே பயணிகள் பஸ்களில் நெருக்கமாகப் பயணிப்பதை முடிந்தளவுக்கு தவிர்த்துக் கொள்ள வேண்டும். என்றார். (4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


## கோத்தாபயவும் கோமாளிக் கூத்துகளும்

ஒரு மன்னன் தனது மெய்ப்பாதுகாவலாளியாக தான் வளர்த்த குரங்கை நியமித்தான்.மனிதர்களை விடவும் குரங்கு விசுவாசம் மிக்கது என்பது அவன் நம்பிக்கை. அந்தக் குரங்கும் மன்னன் தன்மேல் வைத்த நம்பிக்கையை காப்பாற்றுவது போல, அவனை நன்றாகவே காவல் செய்தது. ஒருநாள் வேட்டைக்குச் சென்ற மன்னன் களைப்பு மேலீட்டால், காட்டினுள் அயர்ந்து தூங்கத் தொடங்கினான். காட்டு விலங்குகள் அவனை நெருங்காமல், காவல் புரிந்த குரங்கின் கண்ணில் தென்பட்டது மன்னனின் முகத்தில் இருந்த ஒரு இலையான். தன் கட்டுக்காவலை மீறி மன்னனின் முகத்தில் இலையான் இருந்துவிட்டதே என்ற ஆத்திரத்தில் வாள் கொண்டு இலையானை விரட்டத்தொடங்கியது குரங்கு. அப்படி விரட்டுகையில் ஓங்கிய வாள் இலையானைத் தாக்காமல் மன்னனைத் தாக்கி அவன் உயிரை விட நேர்ந்தது.

மன்னன் மீது அதீத விசுவாசமும், காவல் காப்பதில் திறனும் அந்தக் குரங்குக்கு வாய்த்திருக்கலாம். ஆனால் அவற்றை மட்டும் தகுதியாக நினைத்து அதனை மெய்க்காவலாளியாக்கி, அதன் கையில் வாளைக் கொடுத்து தன் உயிருக்கே உலை வைத்தது மன்னனின் தவறே. அந்த மன்னனைப் போலவே தான் இலங்கை மக்களும், போரில் வெற்றிகளை ஈட்டித்தந்தவர் என்ற ஒற்றைக் காரணத்துக்காக கோத்தாபயவை ஜனாதிபதியாக்கியதன் விளைவை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். கோத்தாபய போரியல் ரீதியாக வெற்றிகரமான பல முடிவுகளை உறுதியாக எடுத்தவராக இருக்கலாம். யாராலும் தோற்கடிக்க முடியாத புலிகளை வெற்றிகொண்ட சூத்திரதாரியாகவும் இருக்கலாம்.ஆனால் அவை மட்டுமே ஒரு நாட்டை ஆள்வதற்கான தகுதிகளாக மாறிவிடாது. ஜனாதிபதி கோத்தாபய , நாளும் பொழுதும் விடுக்கின்ற அறிவிப்புகளும்,சட்டங்களும் அவரைக் கோமாளிபாயவாக மக்கள் மனதில் பரிகசிக்க வைக்கின்றன.

ஒரு புறம் கொரோனாவாலும், இன்னொரு புறம் பொருளாதார ரீதியாகவும் இலங்கை மிகமோசமாக பாதிக்கப்பட்டு வரும் நிலையில் அவற்றில் இருந்து நாட்டை மீட்பதற்கான திட்டங்கள் எவையும் இப்போதைய அரசாங்கத்திடம் அறவேயில்லை.மாறாக கொரோனா, பொருளாதாரச்சரிவு என்பவற்றுக்கு போட்டியாக , கோத்தாபய அரசாங்கமும் மக்களை இன்னும் நெருக்கடிக்குள் தள்ளும் போக்கையே கைக்கொள்கின்றது. இராணுவத் தளபதியின் கையில் கொரோனா தடுப்புப் பணியைக் கொடுத்துவிட்டால் ,அந்தப் பெருந்தொற்றை இல்லாமலாக்கிவிடலாம் என்ற ஆட்சியாளர்களின் அபத்தக்கனவுகளுக்கான விலையை மக்கள் தான் கொடுக்கவேண்டியிருக்கிறது.கொரோனா ஒழிப்பையும்,பொருளாதார மேம்படுத்தல்களையும் விடுத்து மஞ்சள் இறக்குமதிக்கு தடை, மாடு வெட்டத் தடை, பால்மா இறக்குமதிக்கு தடை, தொல்பொருளின் பெயரால் தமிழர் பகுதிகளில் விகாரைகள் கட்டுதல் என்று தேவையில்லாத ஆணிகளை கோத்தாபய பிடுங்கிக் கொண்டிருக்கிறார். அதனால் மஞ்சள் கடத்தல் பொருளாக மாறிவிட்டது. பால்மா வகைகள் கடைகளில் காணாமல் போய்விட்டன. மாடு வெட்டத்தடை விதிக்கப்படுவதால் ஆயிரக்கணக்கானோர் வேலைவாய்ப்பை இழப்பதுடன், பெரும்பாலான பண்ணையாளர்களும் தங்கள் தொழிலைக் கைவிடும் முடிவுக்கு வந்துவிட்டார்கள். தொல்பொருளின் பெயரால் நடைபெறும் ஆக்கிரமிப்பால் தமிழர்களிடம் அமைதியின்மை நீடிக்கிறது.

இவையெல்லாம் கோத்தாபய ஆட்சியின் சீத்துவத்துக்கு சில உதாரணங்கள் மட்டுமே.சிலவேளைகளில் அடுத்து வரும் தேர்தலில், கோத்தாபய அரசாங்கம் வீழ்த்தப்பட்டாலும் கூட ,இப்போது ஆட்சியாளர்கள் நடத்தும் கூத்துகளின் பாதிப்புகளில் இருந்து நாட்டை மீளக்கட்டியெழுப்ப சில தசாப்தங்கள் தேவைப்படும்.குரங்கு கையில் வாளைக் கொடுத்தால் வெட்டு வாங்குவதைத் தவிர வேறுவழியில்லையே!




### வடமாகாண கல்வித் திணைக்களத்தின்

# கணினிக் கொள்வனவில் பெருந்தொகை மோசடி!

### கேள்வி கோரிய நிறுவனமொன்று துறைசார் அதிகாரிகளுக்கு கடிதம்

யாழ்ப்பாணம், ஓக. 9

**வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் 240 கணினிகள் கொள்வனவு செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன என்று குறிப்பிட்டு கேள்வி கோரல் வழங்கிய நிறுவனம் ஒன்று வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளது.**

குறித்த கடிதத்தின் பிரதிகள் வடக்கு மாகாண ஆளுநர், பிரதம செயலாளர் உள்ளிட்ட ஐவருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

குறித்த கடிதத்தில், வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் கோரிய கூறு விலையின் பிரகாரம் 240 கணினிகள் கொள்வனவு செய்யும் கோரிக்கையினை நூறு வீதம் தமது நிறுவனம் நிறைவு செய்துள்ளதோடு, ஏனையவர்களை விட விலை குறைவானதாக இருந்த போதும் தங்களின் விலையை விடவும் ஒரு கணிணிக்கு 11 ஆயிரத்து 500 ரூபா அதிக விலையினை கொண்ட வழங்குனரிடம் கொள்வனவு செய்ய கொள்வனவுக் கட்டளை அனுப்பப்பட்டுள்ளது.

இதன்படி 27 லட்சத்து 60 ஆயிரம் ரூபா பணம் மேலதிகமாகச் செலுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் வடக்கு மாகாண கல்வி அமைச்சைத் தொடர்பு கொண்டு வினவிய போது, குறித்த விடயம் தொடர்பில் எமக்கும் கடிதம் கிடைக்கப்பெற்றதன் அடிப்படையில் இது தொடர்பான விளக்கம் ஆளுநருக்கு அனுப்பட்டுள்ளது. 240 கணினிகள் கொள்வனவு விடயத்தில் முறைப்பாடு செய்தவர் கணினிகள் கொள்வனவு செய்வதற்கு பொருத்தமற்றவர் என தொழிநுட்பக் குழு பரிந்துரைத்துள்ளது. எனவே தொழிநுட்பக் குழுவின் பரிந்துரைக்கு அமைவாகவே மேற்படி கொள்வனவு இடம்பெற்றது - என்று தெரிவிக்கப்பட்டது. (ம-113)

# இலங்கையில் டெல்டா பரவ சுற்றுலாவிகள்தான் காரணம்

கொழும்பு, ஓக. 9

இலங்கையில் டெல்டா வைரஸ் தீவிரமடைய, இந்தியா, ரஷ்யா மற்றும் உக்ரைனிலிருந்து வருகைதந்த சுற்றுலாப் பயணிகளே காரணம். இது தொடர்பில் புலனாய்வு விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் நான்காவது கொரோனா அலை கட்டுப்பாட்டை மீறி, பாரதூரமான நிலைமையை அடைந்துள்ளது. 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கொவிட் பரவல் தொடர்பான தகவல்கள் வெளியாக ஆரம்பித்தபோது அரசு அதனை கேலிக்குள்ளாக்கியது.



இதனைவிட பெரும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தோம் என்று கூறிய அரசு, நாளாந்தம் 3ஆயிரம் பேர் உயிரிழந்த போரை நிறைவுக்குக் கொண்டு வந்த எமக்கு, இது பிரச்சினையல்ல என்றும் கூறியது. அரசின் இவ்வாறான அசமந்த போக்கே நாடு தற்போதுள்ள நிலைமைக்குக் காரணமாகும். இதற்கு அரசே பொறுப்புக் கூற வேண்டும் என்றார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 143 மஞ்சள் பொதிகளுடன் ஐந்து இந்தியர்கள் கைது!

## கொரோனா அச்சத்தால் அவர்கள் விடுவிப்பு



கொழும்பு, ஓக. 9
143 உரப்பைகளில் பொதி செய்யப்பட்ட 5 ஆயிரத்து 372 கிலோக்கிராம் உலர்ந்த மஞ்சளுடன் இந்தியப் பிரஜைகள் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிலாபம் முனைக் கடற் பிரதேசத்துக்குள், சட்ட விரோதமாக நுழைந்த படகை இலங்கைக் கடலோரக் காவல் படையினர் சோதனை செய்த போது சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட உலர்ந்த மஞ்சள் மூடைகள் கிருமித் தொற்று நீக்கம் செய்யப்பட்ட பின்னர் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதேவேள, கொரோனா வைரஸ் பரவும் அபாயத்தைக் கருத்தில் கொண்டு, கைது செய்யப்பட்ட இந்தியர்கள் ஐவரும், அவர்கள் பயணித்த படகுடன் இலங்கை கடற்பரப்பிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். (ம-4)

# எரிவாயு விவகாரம் இந்த வாரம் தீர்வு



கொழும்பு, ஓக. 9
சந்தையில் நிலவும் சமையல் எரிவாயு தட்டுப்பாட்டுக்கு இந்த வாரமளவில் தீர்வு வழங்கப்படும் என்று வர்த்தகத் துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலக சந்தையில் சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்பட்டதன் காரணமாகவே சமையல் எரிவாயு சிலிண்டர் விநியோகத்தில் தற்போது நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

எரிவாயு விநியோக நிறுவனத்தினர் தற்போதைய விலையேற்றத்துக்கு அமைய குறைந்தபட்சம் 200 ரூபாவிலிருந்து, எரிவாயுவின் விலையை அதிகரிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போதைய நிலையில் எரிவாயு விலையேற்றத்துக்கு ஒரு போதும் அனுமதி வழங்க முடியாது.

எரிவாயு தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு நிதியமைச்சால் சிரேஷ்ட குழு நியமிக்கப்பட்டது.

இந்தக் குழுவின் அறிக்கை இந்த வாரம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

எனவே லாப் எரிவாயு தொடர்பிலான பிரச்சினைக்கு இந்த வாரம் தீர்வு வழங்கப்படும்.

லாப் எரிவாயு சிலிண்டருக்குப் பதிலாக லிட்ரோ சமையல் எரிவாயுவை விநியோகிக்க முடியுமா என்பது தொடர்பில் தொடர்புடைய நிறுவனங்களுடன் பேச்சு முன்னெடுக்கப்பட்டுள்ளது. - என்றார். (ம-4)

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
12 . 12 . 1951

மறைவு
16 . 08 . 2019

அமரர் பாலச்சந்திரன் தேவகி
திதி: பிரதமை

எம் குடும்ப பாச விளக்காய்
ஒரு கூட்டுக் கிளியாக
எம்மோடு வாழ்ந்து
எம்மையெல்லாம் தவிக்கவிட்டு
விண்ணுலகு புகுந்த உங்களை
நாம் எண்ணாத நாளில்லையம்மா

இத்தியடி பிள்ளையார் கோயிலடி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

நினைவுகளுடன்
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

# அரசியலில் பிரவேசிக்க மகனுக்கு விருப்பமில்லை

## சந்திரிகா அறிவிப்பு

அரசியலில் பிரவேசிக்கும் ஆர்வமோ, விருப்பமோ எனது மகனுக்கு இல்லை என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது முகப்புத்தகப் பதிவில் தெரிவிக்கையில்,

விமுக்தி குமாரதுங்க அரசியலில் பிரவேசிக்கின்றார் என்ற தவறான பிரசாரம் ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களில் பரப்பப்படுகின்றது. இது முற்றிலும் தவறான அறிக்கை. நான் அதனை முழுமையாக நிராகரிக்கிறேன்.

அரசியலில் பிரவேசிக்கும் ஆர்வமோ, விருப்பமோ அவருக்கு இல்லை, விமுக்தி குமாரதுங்க நாட்டை மிகவும் நேசித்தாலும், நாட்டுக்குச் சேவை செய்வதற்கான ஒரே வழி அரசியல் அல்ல என்பதை நான் சொல்ல விரும்புகின்றேன். இதுபோன்ற பொய்யான பிரசாரங்களால் மக்கள் எவரும் ஏமாற வேண்டாம். -என்றார். (ம-4)

# பிராந்தியங்களின் பாதுகாப்பு ஆலோசகர் மட்டத்தில் ஆராய்வு

கொழும்பு, ஓக. 9
இந்து சமுத்திரத்தின் கடல் பாதுகாப்பு, பயங்கரவாதம் மற்றும் அடிப்படைவாதம், கடத்தல்கள் மற்றும் திட்டமிட்ட குற்றங்கள், இணையக் குற்றங்கள் உள்ளிட்ட பிராந்தியத்தில் காணப்படும் பாதுகாப்புச் சவால்களைக் கையாளுதல் தொடர்பில், கொழும்பு பாதுகாப்புக் கூட்டுக்குழுவின் பிரதி தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் மட்ட மெய்நிகர் மாநாட்டில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு பாதுகாப்புக் கூட்டுக்குழுவின் பிரதிப் பாதுகாப்பு ஆலோசகர் மட்டத்திலான முதலாவது மாநாடு இடம்பெற்றுள்ளது.

இதன்போது இந்து சமுத்திரத்தில் இருக்கும் மூன்று நாடுகளிடையில் கடல் மற்றும் பாதுகாப்பு சார்ந்த நெருக்கமான ஒத்துழைப்பை ஏற்படுத்தும் நோக்குடன் கொழும்பு பாதுகாப்புக் கூட்டுக்குழுவை ஸ்தாபிக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டது. ஒத்துழைப்புக்கான விசேட முன்மொழிவுகள், கிரமமான தொடர்பாடல், கூட்டுப் பயிற்சிகள், ஆளுமை விருத்தி மற்றும் பயிற்சி நடவடிக்கைகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாகவும் இங்கு ஆராயப்பட்டது. பிராந்திய ஒத்துழைப்பின் உத்வேகம் மீதான அக்கறையுடன் பிராந்தியத்தில் காணப்படும் தற்கால பாதுகாப்புச் சவால்களை கையாளுதல், உறுப்பு நாடுகளின் ஆளுமை மேம்பாடு ஆகியவற்றில் ஒத்துழைப்பு மற்றும் ஒன்றிணைவின் முக்கியத்துவம் தொடர்பிலும் வலியுறுத்தப்பட்டன.

இந்த மாநாட்டில் இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா, இந்தியப் பிரதிப் பாதுகாப்பு ஆலோசகர் பங்கஜ் சரண் மற்றும் மாலைதீவு ஜனாதிபதி அலுவலக தேசியப் பாதுகாப்புச் செயலாளர் ஐசாத் நூசின் வஹீத் ஆகியோர் பங்குபற்றினர். அத்துடன் பங்களாதேஷ், மொரீஷியஸ், மற்றும் சிசெல்ஸ் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் பார்வையாளர்களாக கலந்து கொண்டனர். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட

# உணவகங்களில் பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்தவும்

## அறம் அமைப்பால் முதல்வரிடம் மகஜர் கையளிப்பு

**யாழ்ப்பாணம், ஓக.9**

**யாழ்ப்பாணம் மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட உணவகங்களில் பொலித்தீன் பாவனையை கட்டுப்படுத்துமாறு வலியுறுத்தி மாநகர முதல்வரிடம் அறம் அமைப்பினர் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.**



இத்திட்டத்தை உடனடியாக அமுல்படுத்துவதிலிருக்கும் சவால்கள் மற்றும் உணவுப் பாசலில் பயன்படுத்தப்படும் பொலித்தீனுக்குப் பதிலாக வாழை இலை பயன்படுத்தல் போன்ற பல மாற்றுத்திட்டங்களும் இதன்போது அறம் அமைப்பினரால் முன்வைக்கப்பட்டன.

இதற்கு பதிலளித்த மாநகர முதல்வர் பொலித்தீனுக்கு பதிலாக வாழையிலை உள்ளிட்ட உள்ளூர் உற்பத்திகள் உணவகங்களில் பயன்படுத்தப்படும் என்று உறுதியளித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த சமயத் தலைவர்கள், மருத்துவர்கள், சட்டத்தரணிகள், யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகத்தினர், ஆசிரியர்கள், அரச ஊழியர்கள், பல்கலைக்கழக மற்றும் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பல தரப்பட்டோரிடம் பெறப்பட்ட கையெழுத்துக் கோப்பு மற்றும் குறித்த விடயம் தொடர்பில் தயாரிக்கப்பட்ட நிபுணர் குழு அறிக்கை என்பன மாநகர முதல்வர் மணிவண்ணனிடம் கையளிக்கப்பட்டன. (ஐ-26)

# தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா கிடைக்கின்றது

## தொழில் அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,ஓக.9

தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளம் கிடைக்கவில்லை என்று இதுவரை எந்தவொரு முறைப்பாடும் கிடைக்கவில்லை. அவ்வாறெனில் அவர்களுக்கு ஆயிரம் ரூபா கிடைக்கின்றது என்றே அர்த்தம் என்று தொழில் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற ஆகக்குறைந்த சம்பள சட்டத் திருத்தம் மீதான விவாதத்தின் பதில் உரையை நிகழ்த்திய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள உயர்வை பெற்றுக்கொடுப்பதற்காக தொழிற்சங்கங்களுடன் 12 சுற்று பேச்சுக்களை நடத்தியிருந்தேன். தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயத்தில் தொழிற்சங்கங்களுக்கும் பொறுப்பு உள்ளது.

தொழிற்சங்கங்களுக்கு இடையில் முரண்பாடுகளை தோற்றுவித்துக்கொண்டதால் கூட்டு ஒப்பந்தமொன்றை செய்துக்கொள்ள நான் எடுத்திருந்த முயற்சிகள் தோல்வியுற்றன. அந்தத் தருணத்தில் கூட்டு ஒப்பந்தத்தை செய்துக்கொள்ள இணங்கியிருந்தால் இவ்வாறான பிரச்சினைகள் எழுந்திருக்காது.


இந்தச் சூழலில்தான் கம்பனிகள் நீதிமன்றம் சென்றிருந்தன.

அதனைத் தடுக்க சட்டமொன்றைக் கொண்டுவர முற்பட்டிருந்தால் அதிகளவான காலம் சென்றிருக்கும் என்பதால் மாற்று வழியாக சம்பள நிர்ணய சபையைக் கூட்டி அதன் ஊடாக ஆயிரம் ரூபா சம்பளத்தை வழங்க நடவடிக்கையெடுத்தோம்.

ஆயிரம் ரூபா சம்பளம் கிடைக்கவில்லை என்று தொழில் திணைக்களத்துக்கு இதுவரை எந்தவொரு முறைப்பாடும் கிடைக்கவில்லை.

ஆயிரம் ரூபா சம்பளம் கிடைக்கவில்லையென்றால் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருக்கும். நாம் நடத்திய ஆய்விலும் கம்பனிகள் ஆயிரம் ரூபாவை வழங்குகின்றன என்று கூறப்பட்டுள்ளது. ஆயிரம் ரூபா வழங்கப்படவில்லையென்றால் முறைப்பாடுகளை அளியுங்கள்.

ஆயிரம் ரூபா சம்பளத்தை வழங்குவதற்கான இடைக்கால தடை உத்தரவை வழங்கும் செயற்பாட்டை எமது சட்டத்தரணிகள் குழுவின் ஊடாக தடுத்திருந்தோம். ஆகவே, எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் நாம் எடுத்துள்ளோம். எதிர்காலத்தில் சிக்கல்கள் ஏற்படுமாயின் அதற்கான சட்ட ஏற்பாடுகளையும் செய்துள்ளோம். தோட்டத் தொழிலாளர்களுக்காக அரசு முன்னெடுக்கும் போராட்டத்தைக் கைவிட மாட்டோம். இவை அனைத்தையும் விட பிரிந்துள்ள தொழிற்சங்கள் ஒன்றிணைந்து குரல் கொடுத்தால் தொழிலாளர்களின் உரிமைகளை இலகுவாக வென்றெடுக்க முடியும்.- என்றார். (ஒ.4)



# தடுப்பூசிகளுக்காக சென்றவர்கள் மீது தரக்குறைவான வார்த்தைப் பயன்பாடு

## தெல்லிப்பழை மருத்துவமனையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஓக. 9

தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள பொதுமக்கள் வைத்திய அதிகாரிகளின் சிபாரிசுடன் தெல்லிப்பழை வைத்திய சாலையில் தடுப்பூசி பெறுவதற்காக நேற்று முன்தினம் சென்றவேளை, அங்குள்ள ஊழியர்கள் அவர்களை தரக்குறைவாக பேசி அனுப்பிய சம்பவம் இடம்பெற்றுள்ளது. குடாநாடு முழுவதுமுள்ள அனைத்து சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளிலும் பொதுமக்களுக்கு தடுப்பூசி ஏற்றும் பணிகள் இடம்பெற்றுவருகின்றன. இந்த நிலையில் குறிப்பிட்ட சில தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள மக்களை, அருகிலுள்ள வைத்தியசாலைக்கு சென்று தடுப்பூசியை பெறுமாறு மருத்துவ அதிகாரிகள் அறிவுறுத்தி வருகின்றனர்.

தெல்லிப்பழை மருத்துவ அதிகாரியின் அறிவுறுத்தலை யடுத்து 50க்கும் மேற்பட்ட பொதுமக்கள் தடுப்பூசி ஏற்றுவதற்காகச் சென்றபோது, இங்கு இரண்டாம் கட்ட தடுப்பூசிதான் ஏற்ற முடியும். உங்களுக்கு இன்றையதினம் தடுப்பூசி ஏற்ற முடியாது என மருத்துவமனைத் தரப்பால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ அதிகாரிகள் தெரிவித்ததன் அடிப்படையிலேயே தாம் வைத்தியசாலைக்கு வந்தோம் என்று கூறியதையடுத்து, மருத்துவமனை ஊழியர்கள் தம்மைத் தரக்குறைவாகப் பேசி அனுப்பியுள்ளனர் என்று பாதிக்கப்பட்ட பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். (ம)

# சாரதியை தாக்கிவிட்டு தங்கச் சங்கிலி அபகரிப்பு

சாவகச்சேரி, ஓக.9

விபத்தை ஏற்படுத்திவிட்டு வாகனச் சாரதியை தாக்கியதுடன், அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியையும் அபகரித்து சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் மீசாலை ஏ -9 வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் முன்னால் சென்று கொண்டிருந்த வாகனத்துடன் மோதியது. வாகனச் சாரதி இறங்கி சேதமடைந்த பகுதியைப் பார்த்துவிட்டு மோட்டார் சைக்கிளில் வந்தவருடன் கதைத்துள்ளார். அவ்வேளையில் வாகனத்தில் இருந்து வந்து இறங்கிய கும்பல் மோட்டார் சைக்கிள் சாரதியை தாக்கியதுடன் அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியையும் அபகரித்துச் சென்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதில் காயமடைந்த கொக்குவிலைச் சேர்ந்த 26 வயதுடைய மோட்டார் சைக்கிள் சாரதி சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ஐ -9)

# இலங்கையில் கொரோனா தீவிரம் மருத்துவ உபகரணங்கள் இறக்குமதி

கொழும்பு,ஓக.9

இலங்கையில் கொரோனாத் தொற்றால் சுகாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. ஓரிரு வாரங்களில் கொரோனாப் பாதிப்புக்களின் எண்ணிக்கை இரட்டிப்பாகவோ அல்லது மும்மடங்காகவோ அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதனையடுதது மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவுசெய்ய அரசு தீர்மானித்துள்ளது என்று மருந்து உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுகாதார அதிகாரிகளுக்கான தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள், பி.சி.ஆர், அன்டிஜென் சோதனைக் கருவிகள் மற்றும் ஒட்சிசன் கருவிகளை இறக்குமதிசெய்ய அரசு முடிவு செய்துள்ளது.

கட்டுப்பாடுகள் தளர்த்துவதை மக்கள் தவறாகப் பயன்படுத்தியதால், பாதிப்புகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

தொழிற்சங்க நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக ஆர்ப்பாட்டம் செய்பவர்கள் தொற்றுப் பரவுவதற்குக் காரணமாகின்றனர். அண்மையில் அடையாளம் காணப்பட்ட நோயாளிகளிடையே ஒட்சிசன் தேவையுடையோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இவர்கள் கடுமையான அறிகுறிகளை உருவாக்குகின்றனர். இவர்களுக்கு நீண்ட காலத்துக்கு ஒட்சிசனின் உதவி தேவை. -என்றார். (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்

உதயன் கல்விப் பிரிவு

ஆ.விஜிந்தன்
Na.Dip.In.Teaching(Merit), B.A, PGDE,
Dip.In.Couns, MED (2edupper)


பரீட்சை இலக்கம் 3

பெயர் : ..........................................


நேரம் : 1 மணித்தியாலம் பகுதி 1

**1, 2 ஆம் வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்ட உருவை ஒத்த உருவைத் தெரிவு செய்க.**

1.




2.




**3, 4 ஆம் வினாக்களில் தரப்பட்ட கோலத்தை இனங்கண்டு வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

3.




4.




5. தரப்பட்டுள்ள குறுக்கெழுத்துக் கட்டங்களைப் பூர்த்தி செய்க.

இடமிருந்து வலம்
1) கழுகு தருவது
3) அதிகமானோர் நீரைப் பெறுவது.

மேலிருந்து கீழ்
1) பாடகன் என்பதன் எதிர்ப்பாற் சொல்
2) மலையை இப்படியும் அழைப்பர்.



6.



மேலே உள்ள இரு சக்கரங்களையும் அம்புக்குறி காட்டும் திசை வழியே உருட்டும் போது, முதலாம் தடவையில் எழுத்து A யும் எண் 7 உம் ஒன்றை ஒன்று நோக்கியிருந்தன. இரண்டாம் தடவையில் எழுத்து B யும் எண் 8 உம் ஒன்றை ஒன்று நோக்கினால் ஐந்தாவது தடவையில் சந்திக்கும் எண் சோடி.

1. F4 2. G3 3. H 2

**7 ஆம் 8 ஆம் வினாக்களுக்குத் தரப்பட்ட சொற்களை ஒழுங்குபடுத்தும் போது இறுதியில் வரும் சொல்லைத் தெரிவு செய்க.**

7. முதுமை,பிள்ளை, இளமை,குழந்தை
1. பிள்ளை 2. முதுமை 3.இளமை

8. மாகாணம், கிராமம், மாவட்டம், நாடு, நகரம்
1. நாடு 2. கிராமம் 3. மாகாணம்.

9. உலோகக் கரண்டிகளுக்கு மரப்பிடி போடுவதற்கான காரணம்.
1. கரண்டியின் அழகுக்கு ஆகும்.
2. உலோகம் வெப்பத்தைக் கடத்தாது இருப்பதற்காக.
3. மரம் இலவசமாகக் கிடைக்கின்றமையால்.

10. இக்கலந்துரையாடலை வாசித்து சரியான விடையைத் தெரிவு செய்க.
A- ஆ! மிகவும் அழகான சட்டை
B- ஆம் எனக்கு மிகவும் விருப்பம்.
C- உண்மையா! இது புதியது ஒன்று அல்ல.
D- நீர் இதனை விரும்புகிறீரா?
E- ஆனாலும் இது மிகவும் அழகானது.

1. ACEDB 2. ADBCE 3. ABDEC


11. தோமஸ் அல்வா எடிசன் ஒரு விஞ்ஞானியாகக் காரணம்.
1. பெற்றோரின் அளவுக்கதிகமான செயற்பாடு.
2. ஊக்கமும் விடாமுயற்சியும்.
3. நகரில் உள்ள சிறந்த பாடசாலையில் கல்வி கற்றமை.

12. தரப்பட்டுள்ள உருவை அவதானிக்க




A யினால் குறிப்பிடப்படுவது.
1. பகுதித்தலைவர் 2. வகுப்பு முதல்வர் 3. மாணவ முதல்வர்.

13.




பண்ணை ஒன்றில் உள்ள பிராணிகள் பற்றிய விபரம் வருமாறு.

பசுக்கள் ➡ ஆடுகள்

ஆடுகள் ⬅ கோழிகள்


பசுக்கள் ➡ கோழிகள்

இங்கு குறைவாக உள்ள பிராணி

1. பசுக்கள் 2. ஆடுகள் 3.கோழிகள்.

14. கவிதாவின் தங்கைக்கு இரண்டு சகோதரிகள் உள்ளனர். கவிதாவிற்குச் சகோதரர்கள் இல்லை,லலிதா கவிதாவின் தங்கை அல்ல எனின் இவர்களில் மூத்தவர் யார்?
1. கவிதா 2. லலிதா 3. கூறமுடியாது.

15. உருத் தொகுதியை மேலிருந்து பார்க்கும் போது தோற்றமளிக்கும் விதத்தினைக் காட்டும் மிகச் சரியான விடை.





16. P = 1, Q = 6 S = 5 எனக் கொண்டு விடை தருக.

| |
|---|
| P Q |
| R S |
| S P |

இக் கணிதச் செய்கையில் இடப்பட வேண்டிய கணிதச் செய்கைக்குரிய குறியீடு எது?
1. _ 2. X 3. +

17. உருக்களின் அமைவின் அடிப்படையில் பெறுமானம் குறைந்த உரு எது?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. பின்வரும் வாக்கியங்கள் கருத்துள்ளதாக அமைவதற்கு செய்ய வேண்டிய மாற்றத்தை தெரிவு செய்க.
ஒவ்வொரு நாளும் பாடப்புத்தகத்தில் ஒவ்வொரு திகதியாக மாற்றி கொண்டிருந்தது.

1. திகதியாக என்பதற்குப் பதிலாக எழுத்துக்களாக என மாற்றுதல்.
2. பாடப்புத்தகத்தில் என்பதற்குப் பதிலாக நாட்காட்டி என மாற்றுதல்.
3. ஒவ்வொரு நாளும் என்பதற்குப் பதிலாக தினமும் என மாற்றுதல்.

19. ஒரு வித்திலைத் தாவரம் பல்வேறு பகுதிகளையும் பயன்படுத்தலாம், வருடம் முழுவதும் பயன்தரும் இங்கு விபரிக்கப்பட்டுள்ள தாவரம் எது?

1. 2. 3.



20. பின்வருவனவற்றுள் பொய்யான கூற்று.
1. நாய் அனைத்துமுன்னணி ஆகும்.
2. ஒருகால் அற்ற வீரர் ஒலிம்பிக் போட்டியின் ஓட்டப்போட்டியில் முதலிடத்தைப் பெற்றார்.
3. தொடருந்தில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்தது மிகவும் மகிழ்ச்சியானது.

21. ஒருவரின் படத்தைக் காட்டி கண்ணன் இவ்வாறு கூறினான். இப்படத்தில் உள்ளவர் எனது தாயாரின் அக்கா ஆவார். எனவே படத்திலுள்ளவர் கண்ணனின் தங்கைக்கு என்ன உறவாகும்?
1. சிறிய தாயார் 2பேர்த்தி 3. பெரியம்மா

22. 2008 ஆம் ஆண்டு சீனாவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டி 29 ஆவது ஒலிம்பிக் போட்டி ஆகும் எனவே 25 ஆவது ஒலிம்பிக் போட்டி எத்தனை யாம் ஆண்டு நடந்திருக்கும்.
1. 1998 2. 1992 3. 2000

23. சாந்தனும் சுகுமாரும் சந்தித்தபோது எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 23 ஆம் திகதி தனது பிறந்தநாள் என்று சுகுமார் கூறினான். எனின் அம்மாதத்தின் 1 ஆம் திகதி என்ன கிழமையாகும்.
1. வெள்ளிக்கிழமை 2. சனிக்கிழமை 3. ஞாயிற்றுக்கிழமை

24. இவ்வுருவில் $\frac{1}{2}$ நிழற்றுவதற்கு மேலும் எத்தனை கட்டங்கள் நிழற்ற வேண்டும்.



1. 10 கட்டங்கள்
2. 3 கட்டங்கள்
3. 2 கட்டங்கள்.

25. பின்வரும் குறியீடுகளை பிரதியிட்டு சொற்களை ஆக்குக.
PEAEP = விகடகவி எனின், கடகம் என்பது.
1. EAEM 2. EMEA 3. ERES

26. ரிஷி கேஸ் 21 விசுக்கோத்துப் பெட்டிகளைக் கடையிலிருந்து கொண்டு வரவேண்டியிருந்தது. ஒரு தடவைக்கு 4 விசுக்கோத்துப் பெட்டிகளை மட்டுமே கொண்டு வரமுடியும் எனின் 21 விசுக்கோத்துப் பெட்டிகளையும் எத்தனை தடவைகளில் கொண்டு வரமுடியும்.
1. 8 2. 6 3. 5


27. 15 M நீளமான கயிற்றுத் துண்டொன்றை சமமாக மடித்து அதன் நடுவில் வெட்டினால் எத்தனை துண்டுகள் கிடைக்கும்.
1. 4 2. 2 3. 3

28. ஆற்றின் நீர் மணிக்கு 4km வேகத்தில் பாய்கின்றது. மனிதன் ஒருவன் மணிக்கு 6km வேகத்தில் ஆற்றுநீர் ஓட்டத்துக்கு எதிராக நீந்துகின்றான். அவன் நீந்திச் செல்லும் உண்மையான வேகம் மணித்தியாலயத்துக்கு எத்தனை கிலோமீற்றர்?
1. 2km 2. 4 km 3. 6km

29. மார்ச் 18 இல் இருந்து ஜூன் 15 வரையுள்ள நாட்களின் எண்ணிக்கை எத்தனை?
1. 84 நாட்கள் 2. 90 நாட்கள் 3. 91 நாட்கள்


30. ஐந்தாவது சதுர எண்ணுக்கும் மூன்றாவது முக்கோண எண்ணுக்கும் இடையில் எத்தனை இரட்டை எண்கள் உள்ளன?
1.8 2. 9 3. 10

31. ஒரு பக்கம் வர்ணம் பூசப்பட்ட சிறிய சதுர வடிவ மரக்குற்றிகள் எத்தனை?



1. 4 2. 6 3. 12

32.





ஒரு சதுர முகியின் பல்வேறு பக்கங்கள் இவ்வாறு காட்டப்பட்டுள்ளன. எழுத்து W இற்கு எதிரே இருக்கும் படத்தில் உள்ள எழுத்து யாது?
1. K 2.B 3. P

33. மின்சாரப் பாவனைக் கட்டணம் கணக்கிடும்போது முதல் அலகு 30 இற்கு ரூபா 1.00 வீதமும் அடுத்த 15 அலகுகளுக்காக ஓர் அலகுக்கு ரூபா 2.00 வீதமும் அதற்கடுத்த ஓர் அலகுக்கு ரூபா 3.00 வீதமும் அறவிடப்படும். அதற்கமைய மின்சார அலகுகள் 65 இற்கு அறவிட வேண்டிய மொத்தப் பணம் எவ்வளவு?
1. ரூபா 100.00 2. ரூபா 120.00 3. ரூ 135.00

34. உதைபந்தாட்டப் போட்டியில் கலந்துகொண்ட ஓர் அணி ஏனைய 6 அணிகளுடனும் போட்டியிட்டது. அனைத்து அணிகளும் ஏனைய அணிகளுடன் போட்டியிட்டன. இங்கு இடம்பெற்ற போட்டிகள் எத்தனை?
1. 15 2. 21 3. 42

35. சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.





(1) 7
(2) 9
(3) 12

36. ஐந்து குடும்ப உறுப்பினர்களின் தற்போதைய வயதின் கூட்டுத்தொகை 120 ஆகும். ஐந்து வருடங்களின் முன் அவர்களின் வயதுகளின் கூட்டுத்தொகை யாது?
1. 115 2. 125 3. 95

37. நாளொன்றுக்கு 6 மணிநேரம் இயங்குகின்ற ஒரு பாடசாலையில் தினமும் 15 நிமிட இடைவேளை விடப்படுவது வழமையாகும். வியாழக்கிழமை பொதுவிடுமுறை தினமான ஒரு வாரத்தில் இடைவேளை விடப்பட்ட மொத்தநேரம் யாது?
1. 60 நிமிடங்கள் 2. 75 நிமிடங்கள் 3.23 நிமிடங்கள்.

38. கட்டம் ஒன்றை 20 பேர் 25 நாட்களில் கட்டி முடிப்பதாக ஒப்பந்தம் செய்தன. எனின் 10 பேர் அவ்வேலையை செய்ய எத்தனை நாட்கள் எடுக்கும்?
1. 55 2. 45 3. 50

பின்வரும் உருவைப் பயன்படுத்தி 39, 40 ஆகிய வினாக்களுக்கு விடை தருக. இவ்வுருவில் இரு நகரங்களில் உள்ள பாதைகளின் படங்கள் காணப்படுகின்றன. இல 1 பேருந்துத் தரிப்பிடத்தையும் இல 2 பாடசாலையையும், இல 3 மருத்துவமனையையும் இல 4 நூலகத்தையும் குறிப்பிடுகின்றன.




39. A தனது வீட்டிலிருந்து இப்பாதை வழியே எவ்விடத்துக்குச் செல்வதற்குக் குறைந்த தடவைகள் இடப்பக்கமாகத் திரும்ப வேண்டும்?
1. பேருந்து தரிப்பிடம் 2. மருத்துவமனை 3. நூலகம்.

40. B தனது வீட்டிலிருந்து இப்பாதை வழியே சென்றால் எவ்விடத்துக்குச் செல்வதற்குக் கூடிய தடவைகள் வலப்பக்கமாகத் திரும்பவேண்டும்.
1. பாடசாலை 2. நூலகம் 3. மருத்துவமனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள்

**மேடம்:** முன்பு சுலபமாக நிறைவேறிய வற்றிற்கும் முயற்சி தேவை. அன்னை பற்றிய கவலை வேண்டாம். வாகனம் வாங்குவீர்கள். செலவு ஒன்று ஏற்படும். அதனால் நன்மை வரும். பெண்களுக்கு உற்சாகம் மீளும்.

**இடபம்:** உழைப்பால் நன்மை வரும். நல்லவர் ஆலோசனை கிடைக்கும். நல்ல செய்தி பெறுவீர்கள். வெற்றி உண்டு. பயம் நீங்கும். நடவடிக்கைகளில் கவனம் வைத்தால் பழிச்சொல் வராது.

**மிதுனம்:** எதிர்ப்பவர்களைத் தன்வசப்ப டுத்தும் திறமை வரும். நேர்மையான செயல்பாட்டினால் மன நிம்மதி பெறு வீர்கள். குடும்பத்தில் தம்பதிகளிடையே கருத்து ஒற்றுமை வரும்.

**கடகம்:** சிறு பரிசுகள், அன்பளிப்பு கிடைக்கும். கவலை மறக்கும். முன்பி ருந்ததைக்காட்டிலும் பணியில் வேலைப் பளு குறையும். முயற்சியின் காரணமாகப் பணவரவு சற்றே அதிகரிக்கும்.

**சிம்மம்:** கருத்து வேறுபாடுகளால் பிரிந்த குடும்பங்கள் சேரும். புதிய வேலை தேடிய வர்களுக்கு வாய்ப்பு கண்ணில் படும். பிள்ளைகளின் கல்வி/ பணி பற்றிய கவலைகள் தீரும்.

**கன்னி:** நிம்மதியான நாள். நெருங்கிய உறவினரிடமிருந்து செய்தி வரும். நீங்கள் நினைத்துப் பாராதவர்கள் உங்கள் உதவியை நாடுவர். உறவி னர்களிடையே இருந்த பகை மாறும்.

**துலாம்:** சேமிக்கத் தொடங்குவீர்கள். நண்பர்களால் சிறு ஆதாயம் உண்டு. சமீபத்தில் வாங்கிய பொருள் அல்லது பங்கின் பண மதிப்பு உயரும். வம்பு பேசினால் இக்கட்டு வரும்.

**விருச்சிகம்:** பணவரவுகள் முன்பின் னாக இருந்தாலும் செலவு கட்டுக்குள் இருக்கும். துன்பங்கள் தீரும். தொடர்பு விட்டுப்போன உறவினர் வருவார்.

**தனுசு:** நேற்றைய பிரச்சினை முழுவ துமாய்த் தீர்ந்து நிம்மதி வரும். யாரி டமும் பகை வேண்டாம். சிறு இடரைச் சமாளிக்க வேண்டியிருக்கும். உழைப் புக்கேற்ப வருமானம் அதிகரிக்கும்.

**மகரம்:** திறமைகளை வெளிப்படுத்த முடியாதபடி இருந்த தடை நீங்கும். சுப நிகழ்ச்சி நல்லபடி நடப்பதற்கான கடும்முயற்சியில் வெல்வீர்கள். முன் னேற்றத்தில் தடை விலகும்.

**கும்பம்:** குழந்தைகள் குறிக்கோளை அடைவதற்கான முயற்சியில் ஆதரவு அதிகரிக்கும். கடனைத் திருப்பி தருவீர்கள்.

**மீனம்:** இனிமையான நபர்களுடன் மகிழ்ச்சியாகப் பொழுது கழியும். முயற்சிக்கு நல்ல பலனும், விருதுகளும், பரிசுகளும் கிடைக்கும். விரும்பிய விஷயம் ஒன்றை முடிப்பீர்கள்.




# தனுஷின் புதிய படம் 'திருச்சிற்றம்பலம்'

தனுஷ், மித்ரன் ஜவகர் கூட்டணியில் உருவாகி வரும் புதிய படத்தின் தலைப்பு ஆன்மிகம் நிறைந்ததாக வெளியாகியுள்ளது.

இயக்குநர் மித்ரன் ஜவகர் 11 ஆண்டுகளுக்கு பின் தனுஷுடன் மீண்டும் இணைந்து தனுஷின் 'டி44' படத்தை உருவாக்கி வரு கின்றனர்.

இப்படத்தை சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது.

இந்தப் படத்துக்கு அனிருத் இசையமைக்கிறார்.

இப்படத்தில் தனுஷுக்கு ஜோடியாக நடிக்க பிரியா பவானி சங்கர், நித்யா மேனன், ராஷி கண்ணா ஆகியோர் ஒப்பந்தமாகி உள்ளனர். மேலும் பாரதிராஜா, பிரகாஷ் ராஜ் ஆகியோர் முக்கிய கதாபாத்தி ரங்களில் நடிக்கின்றனர். தற்போது இப்படத்தின் தலைப்பை படக் குழு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. அதன்படி இப்படத்துக்கு 'திருச்சிற்றம்பலம்' என பெயரிடப்பட்டுள்ளது.



கோபப்பட்டு ஜெயித்துவிட்டால் உன் கோபம் பெரிது என்று அர்த்தமில்லை. அதைத் தாங்கிக் கொண்டவர்களின் பொறுமை பெரிது என்று அர்த்தம்

### ஜோக்கர்..

பேசவேண்டிய நேரத்தில்,
பேசவேண்டியதை பேசா விட்டால்,
ஏற்கக்கூடாத நேரத்தில்,
ஏற்கக்கூடாத பழிகளை,
ஏற்க வேண்டி வரும்..!!!

### மௌனவரி


அவமானங்களை பொறுமையாய்
ஏற்றுக்கொள்வோருடன்
வெகுமானங்களும் சேர்ந்தே
கைகோர்த்துக் கொள்கிறது

### உன்னை அறிந்தால்

ஒருவரின் அன்பு ஆரம்பத்தில் இருந்தது
போல் இறுதி வரை இருக்கிறது
என்றால் அவர்கள் உறவுகள் அல்ல
உணர்வுகள்...!!!

### உன்னை அறிந்தால்

தோல்விகள் என்பவை உன்னை
தூங்க வைக்க பாடும் தாலாட்டு
அல்ல.
நீ நிமிர்ந்து நிற்பதற்கான
தேசிய கீதம்....













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரியாவின்
# டாரா மாகாணத்தில் உச்சக்கட்டப் போர்

### போர் நிறுத்தத்துக்கு வருமாறு ஐக்கிய நாடுகள் சபை அழைப்பு



**வொஷிங்டன், ஓக. 9**

**சிரியாவின் டாரா மாகாணத்தில் அரச படைகளுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் உச்சக்கட்டப் போர் இடம்பெற்று வரும் நிலையில், போர் நிறுத்தத்துக்கு வருமாறு ஐக்கிய நாடுகள் சபை அழைப்பு விடுத்துள்ளது.**

சிரியாவில் இருந்து ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பு தோற்கடிக்கப்பட்டாலும், அங்கு அரச படைகளுக்கும் கிளர்ச்சிக் குழுக்களுக்கும் இடையில் மோதல் இடம்பெற்று வருகின்றது.

டாரா மாகாணத்தில் கடந்த இரு வாரகாலமாக இடம்பெற்றுவரும் இந்த உச்சக்கட்டப் போரில் சுமார் 18 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர். இந்த நிலையிலேயே போர் நிறுத்தத்துக்கு வருமாறு ஐக்கிய நாடுகள் சபை அழைப்பு விடுத்துள்ளது.

முன்னதாக ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பும் சிரியாவில் தீவிரமாக ஆதிக்கம் செலுத்தி வந்தது. டமஸ்கஸ், இட்லிப், பல்மைரா போன்ற மிகப்பெரும் நகரங்கள் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இருந்தன. எனினும் பின்னர் அமெரிக்கக் கூட்டுப்படையின் உதவியுடன் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பை சிரியா ஓரளவுக்குக் கட்டுப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (ம)



# சீனாவில் மீண்டும் கொவிட் தொற்று

பீஜிங், ஓக. 9

சீனாவில் மீண்டும் நாளுக்கு நாள் கொரோனாத் தொற்று அதிகரித்து வருகின்றது என்று சீன சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

இது குறித்து சீன ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், சீனாவில் கடந்த 4ஆம் திகதி கொரோனாத் தொற்று 85பேருக்கு இருந்த நிலையில் ஓகஸ்ட் 5ஆம் திகதி மேலும் 125 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதன் பின்னர் இன்னும் சிலருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பல தொற்றாளர்கள் சமூகத்தில் இருந்துதான் அடையாளம் காணப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக சீனாவின் வுகான் மாகாணத்தில் மீண்டும் தொற்றாளர்கள் அவதானிக்கப்பட்டமையும் வுகான் மாகாணம்தான் கொரோனா வைரஸின் பிறப்பிடம் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

# ஊடக மையத்தின் தலைவர் தலிபான்களால் படுகொலை!

### ஆப்கானிஸ்தானில் பயங்கரம்




காபூல், ஓக. 9

ஆப்கானிஸ்தானின் அரசு ஊடக மையத் தலைவர் தலிபான் தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஆப்கானிஸ்தான் நாட்டில் அரசு ஊடக மையத்தின் இயக்குநராக இருந்து வந்தவர் தவா கான் மேனாபால். இவர் அரசின் செய்திக் குறிப்புகளை உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடகங்களுக்கு வழங்கி வந்தார். இந்த நிலையில் அவரை தலிபான் தீவிரவாதிகள் சுட்டுக் கொலை செய்துள்ளனர்.

இது தொடர்பாக தலிபான் தீவிரவாத அமைப்பின் செய்தித் தொடர்பாளர் ஜபிபுல்லா முஜாஹித் கூறுகையில், 'மேனாபாலை நாங்கள் தான் சுட்டுக் கொன்றோம். அவர் எங்களுக்கு எதிராக அரசு வெளியிடும் செய்திகளை ஊடகங்களுக்குக் கொண்டுசென்று சேர்த்தார். அவருடைய செய்கைக்காக அவரை தண்டித்துள்ளோம்' என்று கூறினார். (ம)



# பணக்காரர் பட்டியல் பெர்னார்ட் முதலிடம்

வொஷிங்டன், ஓக. 9

உலகப் பணக்காரர் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தார் லூயி உய்ட்டன் நிறுவன உரிமையாளர் பெர்னார்ட்.

இதுவரை காலமும் முதலிடத்தில் இருந்த ஜெப் பெஸோஸை இரண்டாவது இடத்துக்குத் தள்ளி முதலிடத்தைப் பிடித்தார் பெர்னார்ட். பெர்னார்ட் 198.2 பில்லியன் டொலர் சொத்து மதிப்போடு உலகின் முதல்தர பணக்காரராகத் திகழ்கின்றார். 194.9 பில்லியன் டொலர்களுடன் ஜெப் பெஸோஸ் இரண்டாவது இடத்தில் உள்ளார். (ம)




# 50 வீதமான மக்களுக்கு முழுமையாகத் தடுப்பூசி

### அமெரிக்கா சாதனை

வொஷிங்டன், ஓக. 9

அமெரிக்காவில் 50 சதவீதமான மக்களுக்கு தடுப்பூசியின் இரண்டு டோஸ்களும் முழுமையாக வழங்கப்பட்டுள்ளன என்று அமெரிக்க அதிபர் பைடன் தெரிவித்தார். கொரோனாத் தொற்றுக்கு எதிரான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையில் அமெரிக்கா தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளது.

கொரோனாத் தொற்றால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடாக அமெரிக்காவே உள்ளது. இதனால் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் அங்கு தீவிரமாக இடம்பெற்று வந்தன. இந்த நிலையில் நாட்டு மக்களில் 50 சதவீதமானவர்களுக்கு தடுப்பூசியின் இரண்டு டோஸ்களும் வழங்கப்பட்டுவிட்டன என்று அமெரிக்க ஜனாதிபதி அறிவித்துள்ளார். கிட்டத்தட்ட 75 சதவீதமான நபர்களுக்கு தடுப்பூசியின் முதல் டோஸ் வழங்கப்பட்டு விட்டது என்றும் அவர் குறிப்பிட்டார். (ம)

# ஆப்கானிஸ்தானிலிருந்து உடன் வெளியேறுங்கள்!

### தன் நாட்டு மக்களை அறிவுறுத்தியது பிரிட்டன்

லண்டன், ஓக. 9

ஆப்கானிஸ்தானில் தங்கியிருக்கும் பிரிட்டன் மக்கள் உடனடியாக அங்கிருந்து வெளியேற வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது பிரிட்டன்.

ஆப்கானிஸ்தானில் நாளுக்குநாள் தலிபான்களுக்கும் ஆப்கானிஸ்தான் அரசுக்கும் இடையே போராட்டம் தீவிரமாகிவரும் நிலையில் இந்த அறிவிப்பை பிரிட்டன் விடுத்துள்ளது.


கடந்த சில நாள்களாக ஆப்கானிஸ்தானில் தங்கியுள்ள வெளிநாட்டவர்கள் தலிபான்களால் இலக்குவைத்துக் கொல்லப்பட்டுவரும் நிலையில் இந்த அறிவிப்பை பிரிட்டன் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலைமை மிகமோசம் கட்டுப்பாடு அவசியம்

## பொதுச்சுகாதார பரிசோதகர் சங்கம் வலியுறுத்தல்



**கொழும்பு, ஓக. 9**

**கொரோனா வைரஸ் தாக்கத்தால் இந்தியா மற்றும் இந்தோனேசியாவில் ஏற்பட்ட நிலைமை இலங்கையிலும் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே, கடுமையான பயணக்கட்டுப்பாடுகள் உடன் விதிக்கப்பட வேண்டும் என்று பொதுச்சுகாதார பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன நேற்று வலியுறுத்தினார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

'நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைக்கு அரசும், மக்களும் சமாந்தரமாக பொறுப்புக் கூற வேண்டும். இந்தியாவில் ஏற்பட்ட அதைப்போல இந்தோனேசியாவில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை இங்கும் ஏற்படும் அபாயம் உள்ளது.

வைத்தியசாலைகள் நிரம்பி வழிகின்றன. இடைத்தங்கல் சிகிச்சை மையங்களும் நிரம்பிவருகின்றன. தொற்றாளர்கள் பலர் வீடுகளிலேயே இருக்கின்றனர். நிலைமை சுகாதார தரப்பின் கட்டுப்பாட்டை மீறும் விளிம்பிலேயே உள்ளது. கம்பஹா, கொழும்பு மற்றும் களுத்துறை மாவட்டங்களில் சேவையை வழங்க முடியாத நிலைமை பொது சுகாதார அதிகாரிகளுக்கும் ஏற்பட்டுள்ளது.

எனவே, கடும் பயணக்கட்டுப்பாடு விதிக்கப்படவேண்டும். மக்களும் சுகாதார நடைமுறைகளை முழுமையாக பின்பற்ற வேண்டும்.' - என்றார். (ம-44)

# கொரோனா தீவிரமாகின்றது ஆர்ப்பாட்டங்கள் வேண்டாம்

## அமைச்சர் வீரசேகர கோரிக்கை

கொழும்பு, ஓக. 9

நாட்டின் கொரோனா நிலைமையைக் கருத்தில் கொண்டு ஆர்ப்பாட்டங்களில் இருந்து விலகிக் கொள்ளுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர கேட்டுக்கொண்டுள்ளார்.

இலங்கையில் கொரோனா பரவல் தீவிரமடையும் நிலையில், அவர் இந்தக் கோரிக்கையை முன் வைத்துள்ளார்.

இலங்கையில் கொரோனா பரவல் அபாயம் மிக மோசமாக அதிகரித்துள்ளது. ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ள நியாயமான காரணங்கள் இருந்தாலும், தொற்று நோய்ப் பரவலின்போது ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வது நியாயமானதாக அமையாது என்றும் அமைச்சர் சரத் வீரசேகர மேலும் தெரிவித்துள்ளார். (ம-22)

# இரண்டாவது டோஸ் தடுப்பூசி தென்மராட்சியில் இன்று முதல்

சாவகச்சேரி ஓக. 9

தென்மராட்சி பிரதேசத்தில் கொவிட்-19 இரண்டாவது டோஸ் இன்று திங்கட்கிழமை தொடக்கம் மூன்று நாள்களுக்கு ஏற்றப்படவுள்ளது.

கடந்த 29ஆம் திகதிக்கு முன்னர் முதலாவது டோஸ் தடுப்பூசியைப் பெற்ற அனைவரும், முதலாவது டோஸ் ஏற்றிய நிலையங்களில் இரண்டாவது டோஸையும் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

முதலாவது டோஸ் தடுப்பு மருந்து ஏற்றி ஒரு மாதத்தின் பின்னரே இரண்டாவது டோஸ் ஏற்ற வேண்டும் என்பதால் கடந்த 29ஆம் திகதி தொடக்கம் நேற்று வரை தடுப்பூசி மருந்து பெற்றவர்கள் வருகை தரவேண்டாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. தென்மராட்சி பிரதேசத்தில் 60 வயதுக்கு மேற்பட்டோர், அரச திணைக்கள முன்களப் பணியாளர்கள், பாடசாலைகளின் அதிபர்கள் ஆசிரியர்கள், மதகுருமார், உதவியாளர்கள் உள்ளிட்ட 11 ஆயிரத்துக்கு மேற்பட்டோருக்கு முதலாவது டோஸ் தடுப்பூசி ஏற்றப்பட்டது.

சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டபம், கொடிகாமம், கைதடி மற்றும் வரணி ஆகிய மருத்துவமனைகளில் உள்ள நிலையங்களில் இரண்டாவது டோஸைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## தென்மராட்சி பிரதேசத்தில்

# கொவிட் தடுப்பூசிகளை இதுவரை பெறாதோருக்கு இன்று சந்தர்ப்பம்

சாவகச்சேரி, ஓக. 9

தென்மராட்சி பிரதேசத்தில் இதுவரை கொவிட் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளாத 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மேலும் ஒருநாள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

30 வயதுக்கு மேற்பட்டோருக்கு கொவிட்-19 தடுப்பூசி ஏற்றுவதற்கு இறுதித் திகதி நேற்றுமுன்தினம் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டதால் பிரதேசத்தில் உள்ள நான்கு நிலையங்களிலும் மக்கள் பெருமளவில் வருகை தந்திருந்தனர்.

நேற்று தடுப்பூசி ஏற்றிக் கொள்ள முடியாதவர்களுக்கு இன்று திங்கட்கிழமை சாவகச்சேரி நகரசபை பொன் விழா மண்டபம், மீசாலை, கொடிகாமம் மற்றும் வரணி ஆகிய மருத்துவமனைகளில் தடுப்பூசி ஏற்றுவதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை உணவு மற்றும் மருந்து பாவனையின்போது ஒவ்வாமை ஏற்படுவோர் என கருதப்பட்ட 200க்கும் மேற்பட்டோருக்கு நேற்றுமுன்தினம் சாவகச்சேரி மருத்துவமனையில் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன. (ஐ-9)

# தடுப்பூசி பெறாதவர்களை இலக்குவைத்து தேடுதல்

## கொழும்பிலிருந்து ஆரம்பம்





கொழும்பு, ஓக. 9

கொரோனா மற்றும் டெல்டாவின் பேராபத்தையடுத்து கொழும்பு மாவட்டத்தில் இதுவரையில் கொரோனாத் தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளாதவர்களை அடையாளம் காண சிறப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இந்தச் சிறப்பு நடவடிக்கையின் மூலம் தடுப்பூசி ஏற்றிக்கொள்ளாத 30 வயதுக்கு மேற்பட்டவர்களை அடையாளம் கண்டு அவர்களைத் தடுப்பூசி போட்டுக்கொள்ள அறிவுறுத்தவுள்ளதாகவும் பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டார்.

அத்தோடு இதுவரை கொழும்பு மாநகரத்தில் தடுப்பூசி ஏற்றிக்கொள்ளாத 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் சுகததாச விளையாட்டு அரங்குக்குச் சென்று முதல் டோஸ் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (ம-22)



# ஜப்பானிலிருந்து இலங்கைக்கு 728,000 தடுப்பூசிகள் வந்தன!

கொழும்பு, ஓக. 9

அஸ்ராஜெனகா தடுப்பூசியின் 7 லட்சத்து 28 ஆயிரம் டோஸ்கள் நேற்றுமுன்தினம் இலங்கைக்குக் கிடைத்துள்ளன.

ஜப்பான் நன்கொடையாக வழங்கிய 14 லட்சம் தடுப்பூசிகளின் எஞ்சிய தொகை கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

இவை தெரிவு செய்யப்பட்ட இடங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# 2 வாரங்களுக்காவது நாட்டை முடக்குங்கள்

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 9

தற்போதைய கொரோனா நிலைமையைக் கருத்திற்கொண்டு, வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு குறைந்தது 2 வாரங்களுக்கேனும் நாட்டை முடக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

குறித்த சங்கத்தின் தலைவர் ருக்ஷான் பெல்லன இதனைத் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு தேவையின் பிரகாரமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசு தவறியமையே தற்போதைய ஆபத்தான நிலைமைக்கு காரணம். ஆரம்பத்தில் இருந்தே கொரோனா தொடர்பில் பல்வேறு எச்சரிக்கைகளை எமது சங்கம் வெளியிட்டு வந்தது. ஆனால் அரசு அதை புறக்கணித்தது.

நாட்டை முடக்குவதால் பொருளாதாரம் பாதிக்கப்படும் என்றாலும், குறைந்தது 2 வாரங்களுக்காவது நாட்டை முடக்க வேண்டும். இல்லையென்றால் அரசுக்கு ஏற்படும் பொருளாதார பாதிப்பைவிட இரு மடங்காக பாதிப்புகள் இன்னும் 2 வாரங்களில் ஏற்படும் என்று அவர் மேலும் எச்சரித்துள்ளார். (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 14 . 04 . 1953

உதிர்வு 07 . 08 . 2013

**அமரர் இராசையா சரவணபவன்**
**(பழனி ஆசாரி)** திதி: பிரதமை

ஆண்டுகள் எட்டு கடந்தாலும்
ஆறாத வடுவாக உங்கள் நினைவு
இவ்வுலகில் நாம் வாழும் காலம் வரை
எம்முடன் இணைந்து மலர்ந்திருக்கும்

என்றும் உங்கள் நினைவில் வாழும்
குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 27.03.1937

மறைவு 02.08.2021



**திருமதி சுப்பிரமணியம் அன்னலட்சுமி**
கோவளம், காரைநகர்

எமது கல்லூரியின் பழைய மாணவரும், கல்லூரியின் வளர்ச்சிக்கு மிகுந்த உறுதுணையாகவும் விளங்கி வருகின்ற **திருவாளர் சுப்பிரமணியம் கதிர்காமநாதன்** அவர்களின அன்புத் தாயாரின் இழப்பின் துயரில் மூழ்கி யிருக்கும் அவர் தம் குடும்பத்தினர், உற்றார், உறவினர் மற்றும் உறவினர் களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா அமைதிபெற எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பரேஸ்வரப் பெரு மானைப் பிரார்த்திக்கின்றோம்.

**கல்லூரிச் சமூகத்தினர்**
**யா/ யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர்.**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமலநேசன் றோஸ்மலர் (புனிதம்)**

தோற்றம் 23.05.1958

மறைவு 09.08.2020

நாள்கள் பல நூறு ஓடி மறைந்தாலும் - எம்
நெஞ்சில் நிலைத்திருக்கும் பாசதீபம் - உங்கள்
நினைவுகள் என்றும் அழியாது
கண்ணின் இமைபோல எமைக்காத்த அம்மா
உங்கள் கனவுகள் யாவும் நிறைவேறும்.

09.08.2021 திங்கட்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

**குடும்பத்தினர்**

# கண்ணீர் அஞ்சலி



அமரர் **கார்த்திகேசு குணரத்தினம்**

(Retired Asst Director of Agriculture, NorthEast Province, Sri Lanka National Consultant UN/FAO, Sri Lanka)

தோற்றம் 22.05.1933

மறைவு 01.08.2021

முன்னைநாள் கால்பந்தாட்ட, கரப்பந்தாட்ட வீரரும் எமது கிராமத்தின் வளர்ச்சிக்காக பல அமைப்புக்களில் தலைமைத்துவத்தை ஏற்று வழி நடத்தியவரும் சிறந்த சமூக சேவையாளருமாகிய அமரர் **கார்த்திகேசு குணரத்தினம்** அவர்களின் மறைவினால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அமரர் தம்பையா தர்மலிங்கம் குடும்பம்**
**திருமகள் வீதி, அரியாலை.**

# பெயர் மாற்றம்

210 கோயில் வீதி, நல்லூர் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் **சுந்தரம்பிள்ளை இராசநாயகி** ஆகியநான் எனது பெயரை **சுந்தரம்பிள்ளை பரிமளகாந்தி** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **சுந்தரம்பிள்ளை பரிமளகாந்தி** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசுக்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்

சுந்தரம்பிள்ளை பரிமளகாந்தி

# கேள்வி அறிவித்தல்
## சபை நிதி வேலைத்திட்டம் - 2021
## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

01. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர் களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான வேலைகளுக் காகக் கோரப்படுகின்றது.

02. தேசிய போட்டிக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாக கேள்வி கோரப்படுகின்றது. அட்டவணை I வேலை தொடர்பில் 04/2016 (ii) ஆம் இலக்க 08.05.2019ஆந் திகதிய மற்றும் 04/2016 (iii) ஆம் இலக்க 18.02.2021 ஆந் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை பின்பற்றப்படும். அத்துடன் 03/2020 ஆம் இலக்க 09.10.2020 ஆந் திகதிய, 03/2020 (i)ஆம் இலக்க 11.01.2021ஆந் திகதிய சுற்றறிக்கைகளின் ஏற்பாடு களும் பின்பற்றப்படும்.

03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப் படாதவராகவும், வேண்டிய தரத்தினைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். அட்டவணை I வேலை தொடர்பாக கட்டடம் புனரமைப்புக்கு பொருத்தமான தரத்தில் நிர்மான தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு செய்தவராகவும் இருத்தல் வேண்டும்.

04. அட்டவணை I இல் கோரப்பட்ட வேலைக்கு தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி V இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை தலைமையலுவலகத்தில் (தொலைபேசி இல 021 225 5381) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை மானிப்பாய் எனும் இடத்திலிருந்து 09.08.2021ம் திகதியிலிருந்து 23.08.2021ம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் பி.ப 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

07. பெறுகை ஆவணங்களினை இரு பிரதிகளில் தயாரித்து தனித்தனியாக இரு உறைகளில் இட்டு 24.08.2021 ம் திகதி பி.ப 02.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியின் ஒருபகுதியினை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.

09. கோரப்பட்ட வேலைக்கான கேள்வி செல்லுபடியாகும் காலம் கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 77 (எழுபத்தேழு) (08.11.2021) நாட்களாகும்.

10. கேள்விப் பிணைவைப்புத் தொகையும், கோரப்படும் காலமும் கீழே அட்டவணைகளில் காட்டப்படுகிறது.

சபை நிதி வேலைத்திட்டம்

அட்டவணை I

| தொ. இல | வேலை விபரம் மற்றும் கேள்வி இல | மதிப்பீட்டு தொகை மில்லியன் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் | கேள்விப் பிணை: மீளளிக்கக் கூடிய பிணை வைப்பு | கேள்விப் பிணை: கோரப்படும் செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கல்லூண்டாய் திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவ நிலையத்தில் சேதனப்பசளை உற்பத்தி செய்வதற்கான கட்டடம் அமைத்தல். NP/14/41(16)/W/CF/2021/30 | 9.99 | 90 நாட்கள் | C7&C6 (கட்டடம்) | 2000.00 | 100,000.00 | 06.12.2021 |

12. அட்டவணை I இற்குரிய கேள்வி தொடர்பான முதற்கூட்டம் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் 16.08.2021 ம் திகதியன்று பி.ப 2.30 மணிக்கு நடைபெறும்.


அட்டவணை II

| தொ. இல | வேலை விபரம் மற்றும் கேள்வி இல | வேண்டப்படும் தகைமை | ஒப்பந்த காலம் | மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் | கேள்விப் பிணை: மீளளிக்கக் கூடிய பிணை வைப்பு | கேள்விப் பிணை: கோரப்படும் செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | பேலர் இயந்திரம் கொள்வனவு (Supply of Baler Machine) | வியாபாரப் பதிவு | 60 நாட்கள் | 1,000.00 | 8,000.00 | 06.12.2021 |
| 02 | தொற்று நீக்கல் நடவடிக்கைக்காக கூடாரமிடப்பட்ட படி ரக வாகனம் சாரதியுடன் வாடகைக்குப் பெற்றுக் கொள்ளல் | பதிவுச் சான்றிதழ் | 01.09.2021 தொடக்கம் 31.08.2022 | 1000.00 | 6000.00 | 06.12.2021 |

**அ.ஜெயநேசன்,**
**[illegible]**
**பெறுகைக்குழு**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை**
**09.08.2021.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 12.04.1946 | மறைவு 19.07.2012

### அமரர் கந்தையா கணேஸ்

ஆண்டுகள் ஒன்பது - நகர்ந்து மறைந்திடினும்
ஆறுமோ வெந்துயர் அன்பு அப்பாவே
மாண்டுவிடவில்லை நீங்கள் எம் மனதில்
மறையாது என்றும் வாழ்கிறீர்கள் - எம்
உயர்வுக்கு உன்னத வழிகாட்டி வாழ்வை
அர்ப்பணித்த பாசத்தின் தீபமே
உங்கள் நினைவு எங்கள்
நெஞ்சங்களில் என்றும் நிலைத்து வாழும்

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி நாராயணமூர்த்தி சிவகெங்கை



பிறப்பு 24.12.1938 | இறப்பு 08.08.2021

அளவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாராயணமூர்த்தி சிவகெங்கை நேற்று (08.08.2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - நாகம்மா தம்பதியினரின் மகளும், நாராயணமூர்த்தியின் அன்பு மனைவியும் பவானி (பிரான்ஸ்), ஸ்ரீதரன், பாஸ்கரன் (அமரர்), சுதாகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பாலகிருஷ்ணன், விஜயநிர்மலா ஆகியோரின் பாசமிகு மாமியும் பகீரதன், பவித்திரா, பவித்திரன், பகீர்த்தனன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2021) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 712 0789

தகவல் :
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



தோற்றம் 10 . 09 . 1976 | மறைவு 01 . 08 . 2021

### திரு. சொக்கநாதன் சுதாகரன்

(பழைய மாணவன் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி)

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட சொக்கநாதன் சுதாகரன் கடந்த 1ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சொக்கநாதன் மற்றும் புஸ்பவல்லி தம்பதியரின் அன்பு மகனும் பலாலியைச் சேர்ந்த சுப்பிரமணியம் (கண்டி ஸ்ரோர்ஸ்), இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜசோபனா அவர்களின் பாசமிகு கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (09.08.2021) திங்கட்கிழமை பிரான்ஸில் நடைபெறவுள்ளது.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆஸ்பத்திரி வீதி,
அச்சுவேலி

தகவல் :
இராஜேஸ்வரி (மாமி)

## மரண அறிவித்தல்

(கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இது முதல் பாக்கியவான்கள்)
வெளி : 14 :- 13



தோற்றம் 02 . 10 . 1943 | மறைவு 08 . 08 . 2021

### திருமதி
### கந்தசாமி மகேஸ்வரி

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வதிவிடமாகவும் கொண்ட திருமதி **கந்தசாமி மகேஸ்வரி** நேற்று (08.08.2021) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.


அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நித்தியானந்த ஜோதிரகுமார் மற்றும் திருமதி அருள்முருகஜோதி, திருமதி வாசுகி திரு. குமாரஜோதி ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி ஜமுனா, திரு. குணபாலன் திருமதி ஜான்சி, திருமதி அமுதா ஆகியோரின் அன்பு மாமியாரும் திரு. நிரோசன் ஜெயரி, ஜெப்ரி, எல்யசா, கெர்சோன் ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் திருமதி வலன்டினா, திரு.ஆண்டனி ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (09.08.2021) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று கைதடி சேம காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

தகவல் :
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



தோற்றம் 22 . 05 . 1933 | மறைவு 01 . 08 . 2021

### திரு. கார்த்திகேசு குணரத்தினம்

(Retired Asst Director of Agriculture, NorthEast Province, Sri Lanka National Consultant UN/FAO, Sri Lanka)

யாழ்ப்பாணம் அரியாலையைப் பிறப்பிடமாகவும் சிட்னி, அவுஸ்ரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. **கார்த்திகேசு குணரத்தினம்** அவர்கள் (01.08.2021) ஞாயிற்றுக் கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - இராசம்மா தம்பதியினரின் ஏக புதல்வரும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - தங்கரத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகனும் கருணேஸ்வரியின் அன்புக் கணவரும் சுரேகா, சுரேந்திரா, பாலேந்திரா, சத்தியேந்திரா, கஜேந்திரா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுகுமார், நிக்கி, ஹேமலதா, ஹொாங், சோபனா, ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற மகேஸ்வரி, ஞானேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, நடராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற கமலேஸ்வரி, காலஞ்சென்ற மகேஸ்வரி , சிவனேஸ்வரி, காலஞ்சென்ற சிவலிங்கம் , லீலாநந்தேஸ்வரி, காலஞ்சென்ற திருநாவுக்கரசு, ரெட்ணேஸ்வரி, காலஞ்சென்ற தனலெட்சுமி ஆகியோரின் அன்பு சகலனும் Dr.சரணியா, ஷோபியா, சரண், ரூபேஷ், ஆதேஷ், சொபியா, ரயன், சனந்தேஷ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2021) திங்கட்கிழமை முற்பகல் 9.00 - 11.45 (Sydney Time) மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியை Magnolia Chapel, Macquarie Park Cemetery and Crematorium, Cnr Delhi and Piassey Roads, North Ryde NSW 2113 என்ற இடத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக அன்னாரின் இறுதிக் கிரியை அவரின் குடும்ப உறுப்பினர்களுடன் மட்டும் நடைபெறும். அன்னாரின் இறுதிக்கிரியை நிகழ்வுகள் https://streaming.naoca.com.au/e/ca21f64a-eae4-4560-9c44-4d07e7f894a5 (PIN Number 3365) என்ற இணையம் வழியாக இலங்கை நேரம் (காலை 4.30 - 7.30) மணிவரை பார்வையிடலாம்.

சுகுமார் : +44 778 968 1407
சுரேந்திரா : +61 447 246 857
பாலேந்திரா : +61 490 778 630
சத்தியேந்திரா : +61 488 038 639
கஜேந்திரா : +61 403 112 031

தகவல் :
குடும்பத்தினர்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

### அமைச்சர்...

ஐந்து நாள்களாக சுவாமி வெளிவீதி ஊர்வலம் இடம்பெற்றது. கொரோனா நிலைமை காரணமாக கோவில் திருவிழாக்களில் சுவாமி வெளிவீதி உலா வர முடியாது என அறிவிக்கப்பட்ட நிலையில் அதனைப் பொருட்படுத்தாது சுவாமி வெளிவீதி உலாவந்த காரணமாக, பருத்தித்துறை சுகாதாரப் பிரிவினரால் கோவில் செயற்பாடுகளுக்கு நேற்று முன்தினம் தடை விதிக்கப்பட்டது. குறித்த விடயம் ஆலய நிர்வாகத்தினரால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. இதனையடுத்து, சம்பந்தப்பட்ட சுகாதாரத் தரப்பினரை தொடர்பு கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சுகாதார நடைமுறைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் ஆலய பூசைகளை தொடர்வது குறித்து பரிசீலிக்குமாறு கேட்டுக்கொண்டார். இதனையடுத்து, ஆலயத்தின் தற்போதைய பூசகருக்குப் பதிலாக, வெளியிலிருந்து பூசகர் ஒருவர் மாத்திரம் வருகை தந்து பூசைளை நடத்துவதற்கு சுகாதாரத் தரப்பினர் அனுமதி வழங்கியுள்ளனர், என்றுள்ளது. (ஓ.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பண்ணைக்...*

ரைத் தேடும் முயற்சி நேற்று முன்னிரவு வரையில் வெற்றிபெற வில்லை.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியொன்றில் பணியாற்றும் நாவலர் வீதியைச் சேர்ந்த கந்தசாமி கௌதம் (வயது - 29) என்பவரே கடலில் காணாமல் போயுள்ளார். பண்ணை கடற்கரை பகுதிக்கு நண்பர்களுடன் கௌதம் சென்றுள்ளார். பண்ணைப் பாலத்தருகில் நின்றபோது தவறுதலாக கடலினுள் விழுந்த அவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளார்.

நண்பர்களின் கூக்குரலை கேட்டு, அங்கு நின்ற மீனவர்கள் சிலர் இளைஞரை தேடும் பணியை முன்னெடுத்தனர். இருந்தும் அவரை கண்டுபிடிக்க முடியவில்லை.

பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து, நேற்று இரவு வரை தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது இருப்பினும் இளைஞரை தேடும் பணி நேற்று தோல்வியில் முடிந்துள்ளது. கடற்படையினர் இன்றைய தினம் தேடுதல் நடத்துவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ.26)

# சந்நிதியான் கொடி ஏறியது பக்தர்கள் நுழையத் தடை



யாழ்ப்பாணம், ஓக. 9

இறுக்கமான சுகாதார நடைமுறைகளுடன் சந்நிதியான் கொடியேற்றம் நேற்று இரவு சிறப்பாக இடம்பெற்றது.

கொரோனா தொற்று அதிகரித்துள்ள நிலையில் இறுக்கமான சுகாதார நடைமுறைகளை பின்பற்றி மட்டுப்படுத்தப்பட்ட 100 பேரின் பங்குபற்றலுடன் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய வருடாந்த கொடியேற்ற உற்சவம் சிறப்பாக இடம்பெற்றது.

செல்வச்சந்நிதி ஆலயத்துக்கு நுழைவதற்கு அனைத்து இடங்களிலும் வீதித் தடைகள் போடப்பட்டு பொலிஸ் இராணுவத்தினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டு ஆலயத்துக்குள் எவரும் உட்செல்லத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதனையும் மீறி ஆலயத்துக்குச் செல்ல வந்தவர்கள் திருப்பியனுப்பப்பட்டனர்.

பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு சுகாதாரப் பிரிவினர் அனுமதித்த 100 பேருடனேயே திருவிழா நேற்று ஆரம்பமானது. (ஒ.26)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




சௌபாக்யா திட்டத்தின் மூலம் யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவர் அங்கயன் இராமநாதன் ஊடாக தென்மராட்சி கொத்தணி சங்கத்திற்கு ஒரு கோடி ரூபா வழங்க திட்டமிடப்பட்டது.

நிகழ்வில் கொத்தணி சங்க தலைவர் மற்றும் தென்மராட்சி பிரதேச செயலர் கலந்து கொண்டார்கள்.

# சீனா மட்டும்தான் அரசுக்குத் தஞ்சம்

## கோத்தாபய ஆட்சியை விளாசுகிறார் ரணில்



கொழும்பு, ஓக. 9

சீனாவைத் தவிர வேறு எந்த நாட்டிலும் கடன் பெறமுடியாத நிலைமைதான் இலங்கைக்கு உள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெளிநாட்டுக் கொள்கைகள் மாறினாலும் வேறு நாட்டின் கொள்கைக்கு அமைய நாம் செயற்பட முடியாது. எமது நாட்டை அவ்வாறான தொரு இடமாக மற்றைய நாடுகள் கையாள முடியாது. அடையாளங்களையும், தனித்துவத்தையும் பாதுகாத்துக் கொண்டு நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவை உள்ளது.

சீனாவைத் தவிர வேறு எந்த நாட்டிலும் கடன் பெறமுடியாத நிலைமை தான் இங்கு காணப்படுகின்றது. இந்தியா எம்முடன் வரலாற்று ரீதியான விசேட தொடர்பைக் கொண்ட நாடாகக் காணப்படுகின்றது. சீனா மற்றும் இந்தியா என்பவை தென்னாசியப் பிராந்தியத்தின் ஜனநாயக விழுமியங்களைப் பாதுகாக்கின்ற இரண்டு நாடுகளாகும். இந்த உறவை எவரும் முறியடிக்க முடியாது.

ஈஸ்டர் தாக்குதலுக்கு இந்தியா எமது நாட்டுக்குத் தேவையான தகவல்களை வழங்கியிருந்தது.

இருப்பினும் எமக்கு அதனை நடைமுறைப்படுத்த முடியாமல் போனதுதான் பிரச்சினையாக அமைந்திருந்தது.

ஏனைய நாடுகளுடனும் தொடர்புகளைப் பேணலாம். அதில் எந்தப் பிரச்சினையும் கிடையாது. இரண்டாம் உலகப்போரில் நாங்கள் சீனாவுடன் இருந்தோம். சமாதான உடன்படிக்கையில் நாம் ஜப்பானுடன் இருந்தோம். -என்றார். (ம-4)

## தங்கப்பதக்கம் பெற்றமைக்கான வாழ்த்துக்கள்

Co-op Sri Lanka -2021



தேசிய மட்டத்திலான உற்பத்தி சங்கங்களின் தரப்படுத்தலில்
மாகாண மட்டத்திற்கான
**தங்கப்பதக்கத்தை**
**மாண்புமிகு ஜனாதிபதி**
அவர்களிடம் பெற்று
எமது முல்லை மாவட்டத்திற்கும், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்களிற்கும் தேசிய மட்டத்திலான அடையாளத்தை ஏற்படுத்தி பெருமையையும், மதிப்பையும் தேடித்தந்த
**புதுக்குடியிருப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கத்திற்கு**
எமது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கின்றோம்.

*வாழ்த்துவோர்!*

**முல்லை மாவட்ட பனைதென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்**

- முல்லை வடக்கு ப.தெ.வ.அ.கூ.சங்கம்,
- முல்லை கிழக்கு ப.தெ.வ.அ.கூ.சங்கம்,
- முல்லை தெற்கு ப.தெ.வ.அ.கூ.சங்கம்,
- முல்லை மேற்கு ப.தெ.வ.அ.கூ.சங்கம்,
- ஒட்டுசுட்டான் ப.தெ.வ.அ.கூ.சங்கம்,
- விசுவமடு ப.தெ.வ.அ.கூ.சங்கம்,
- பாண்டியன்குளம் துணுக்காய் ப.தெ.வ.அ.கூ.சங்கம்

## St. John's College, Jaffna Old Boys' Association

**SPECIAL GENERAL MEETING**

We will be having a hybrid (physical and virtual) Special General Meeting of the St. John's College, Jaffna Old Boys' Association.

**Purpose**
To obtain permission to continue the current Executive Committee (ExCo) until the next Annual General Meeting (AGM) due to the pandemic and to fill the vacancies in the ExCo.

**Date and Time**
Saturday 28th August, 2021 between 10:00AM to 12:00PM.

**Venue**
**Physical Venue :** College Auditorium.
**Virtual Information :** Either zoom or microsoft teams invitations will be sent to all registered members.

**Registration**
Fill out the form at https://bit.ly/sjcobasgm or send an email to sjcobajaffna@gmail.com. Only after validation virtual invitations will be sent.

New members are welcome to join the association.

Please note that depending on the health guidelines issued on the day of the meeting, we may have to refrain from holding the physical meeting and opt to hold only the virtual meeting.

The Secretary

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெள்ளைவான் கடத்தலை சாதாரணமாகக் கருதாதீர்!

## தென்னிலங்கை மக்களுக்கு செல்வம் அட்வைஸ்

வவுனியா, ஓக. 9

வெள்ளைவான் கடத்தல் சம்பவங்கள் வடக்கில் நடக்கும்போது தென்னிலங்கையில் வாய்மூடி மௌனிகளாக இருந்தார்கள். ஆனால் இன்று தென்னிலங்கையில் வெள்ளைவான் கடத்தல் சம்பவங்கள் இடம்பெற்றுவருகின்றன. இவ்வாறான சம்பவங்களை அங்குள்ள எவருமே வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கக் கூடாது.

இவ்வாறு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

இதேவேளை, ரெலோ அமைப்பின் தலைவர் சிறிசபாரத்தினத்தை, விடுதலைப்புலிகளே கொன்றனர். வடுக்கள் எமது மனங்களில் இருந்தாலும் தேசத்தின் விடுதலைக்காக விடுதலைப் புலிகளுடன் இணைந்து பணியாற்றினோம் என்றும் அவர் தெரிவித்தார்.

ரெலோ அமைப்பின் தலைவரை கொன்றது யார் என்பதை வெளிப்படுத்த முடியுமா? என நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் நாடாளுமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை கேள்வி எழுப்பியிருந்தார்.

இது தொடர்பில் அடைக்கலநாதனிடம் கேட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற உறுப்பினர் திலீபனுக்கு புதிதாக சொல்லவேண்டிய தேவை ஒன்றுமில்லை. நாங்கள் ஏற்கனவே அதனை சொல்லியிருந்தோம். விடுதலைப் புலிகள் இருக்கின்றபோதும் நாங்கள் வெளிப்படையாக சொல்லியிருக்கின்றோம். உண்மையை நாம் மறக்க முடியாது. இதனை நாம் வெட்டவெளிச்சமாக சொல்லிக் கொள்கின்றோம். வடுக்கள் எமது மனங்களில் இருந்தாலும் இந்த தேசத்தின் விடுதலைக்காக நாங்கள் விடுதலைப் புலிகளுடன் இணைந்து பணியாற்றினோம்.

### தவறிவிட்ட அரசு

இதேவேளை, கொரோனா வைரஸ் விடயத்தில் கடந்த காலங்களில் இந்த அரசு மெத்தனப்போக்கை காட்டியமையால் தான் தற்போதைய கொரோனா அபாய நிலைமை உருவாகியுள்ளது. மக்களைப் பாதுகாப்பதிலிருந்து அரசு தவறியுள்ளது. என்றார். (த-110)

# மட்டுப்படுத்தப்படும் தபால் சேவை

கொழும்பு, ஓக. 9

கொரோனா காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் தபால் சேவைகளை முன்னெடுக்க தபால் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

வாரமொன்றில் நான்கு நாள்கள் மட்டும் தபால் சேவைகள் இடம்பெறும் என்று தபால் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஒ.இ)

# வர்த்தக நாமங்களை பார்க்கவேண்டாம் விரைந்து சென்று தடுப்பூசி ஏற்றுங்கள்

## மக்களை மன்றாட்டமாகக் கேட்கிறார் மனோ எம்.பி.

கொழும்பு, ஓக. 9

**கொரோனா தடுப்பூசிகளின் வர்த்தகப் பெயர்களை போட்டுக் குழப்பிகொள்ளவேண்டாம். இவை பற்றிய கருத்துக்கள், வழமையான மருந்து வர்த்தக உலக போட்டா போட்டி விவகாரம். உள்நாட்டில் வாழ்வதற்கும், வெளிநாடு செல்வதற்கும், முதலில் உயிர் வாழ வேண்டும். தடுப்பூசிகளின் வர்த்தகப் பெயர்களை மறந்து விட்டு, தடுப்பூசியை தாமதிக்காமல் போட்டுக்கொள்ளுங்கள். இவ்வாறு தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.**



தடுப்பூசிகளின் வர்த்தகப் பெயர்களை தெரிவு செய்து பெற்றுக்கொள்ளும் எண்ணத்தில் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளாமல் பலர் இருப்பது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நான் ஊருக்கு மட்டும் உபதேசம் செய்யவில்லை. நானும் அப்படித்தான் தடுப்பூசி போட்டுக்கொண்டேன். கொழும்பு ஜிந்துப்பிட்டி மாநகரசபை பொது வைத்திய வாரியத்தில், ஜூன் 21ம் திகதியன்று பொது மக்களுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டபோது, நானும் அங்கு போய், அவ்வேளையில் அங்கிருந்த சைனோபார்ம் தடுப்பூசியைத்தான் போட்டுக் கொண்டேன்.

'கொவிட் அனர்த்தத்தை தடுக்க நடவடிக்கை எடுங்கள்' என் நாம் கடந்த 2020ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் புலம்பியும், இந்த அரசு பல கோமாளி வேலைகளை செய்து காலத்தை ஓட்டியது. கடந்த வருடம் மார்ச் மாதம் அலரி மாளிகையில் பிரதமர் நடத்திய கொரோனா தடுப்பு தொடர்பான கட்சித் தலைவர்கள் கூட்டத்தையடுத்து, 'இந்நாடு ஒரு தீவு. இதனால், எங்களுக்கு நான்கு புறம் கடல் என்ற இயற்கை அரண் இருக்கிறது. ஆகவேதான் நோயாளிகள் குறைவாக இருக்கிறார்கள். ஆனால், நோயாளிகளுடன் பழகிய முதற்தொற்றாளர்கள் 40,000 பேர் இருக்கிறார்கள். அவர்களை உடன் கண்காணியுங்கள்' என நான் கூறினேன். அவ்வேளையில், நோயாளிகள் 40,000 பேர் இருப்பதாக நான் பொய் சொல்லி நாட்டை குழப்புகிறேன் என்று சொல்லி, அரசுதரப்பு அரசியல்வாதிகளான எஸ்.பி. திசாநாயக்க, உதய கம்மன்பில ஆகியோர் என்னை திட்டினார்கள். ஜினானந்த தேரர் என்ற அரசு சார்பு பௌத்த பிக்கு என்னை கைது செய்யும்படி சிஐடியில் புகார் செய்தார். பொலிஸ் என்னை விசாரிக்கவோ, கைது செய்யவோ வரவில்லை. ஆனால், இன்று அந்த முட்டாள் அரசியல்வாதிகளின் ஆட்டங்கள் முடிந்துள்ளன. அந்த முட்டாள் பிக்குவையும் காணோம். அதன்பிறகு இன்றைய அரசு பவித்ரா வன்னியாராச்சி, பிரசன்ன ரணதுங்க, உதய கம்மன்பில ஆகிய அமைச்சர்களைக் கொண்டு, 'மந்திர' சட்டியை களனி கங்கையில் போட்டு, தம்மிக்க என்பவரின் நாட்டு 'வைத்திய' பாணியை பாராளுமன்றம் வரை கொண்டு வந்து வயதான சபாநாயகருக்கும், வயதாகும் சுகாதார அமைச்சருக்கும் பருக்கி, ஒரு வருடத்தை வீணடித்து, மக்களின் உயிரிழப்புக்களுக்கும், துன்பங்களுக்கும், அழுகுரல்களுக்கும், கண்ணீருக்கும் காரணமாகி விட்டது.

இன்று, நமது நாட்டுக்கு இலவசமாக அல்லது போட்டி நிறைந்த உலக நிலைமைகளில் விலைக்காவது, பெருந்தொகை தடுப்பூசிகளையும், அவற்றை விலைக்கு வாங்க நிதி உதவிகளையும் தந்த இந்தியா, சீனா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய நட்பு நாடுகளுக்கும், ஐநா, உலக சுகாதார ஸ்தாபனம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகிய அமைப்புகளுக்கும் நன்றி.


ஆகவே இன்று தரப்படும் தடுப்பூசிகள் இந்த அரசால் தரப்படுபவை அல்ல. மேற்கண்ட நட்பு நாடுகளும், நட்பு உலக அமைப்புகளுமே அவற்றை தருகின்றன. தரப்பட்ட தடுப்பூசிகளை நமது நாட்டு, சுகாதாரத் துறை மருத்துவ ஊழியர்களும், இராணுவத்தினரும் மிக சிறப்பாக மின்னல் வேகத்தில் மக்களுக்கு செலுத்துகின்றனர். 24 மணித்தியாலங்களில், இவர்கள் 48 மணித்தியால வேலைகளை படுவேகமாக செய்கிறார்கள். இவர்களுக்கு நன்றி கூற முழு நாடும் கடமைப்பட்டுள்ளது. இந்த மந்திர பாணி, மந்திர சட்டி கோமாளி வேலைகளை கைவிட்டு, கடந்த வருடமே இந்த தடுப்பூசிகளை பெற்றுக் கொடுத்து இருந்தால், இந்நேரம் முழு நாடும் தடுப்பூசிகளை பெற்று இருக்கும். அவற்றை இவர்கள் சிறப்பாக செய்து முடித்து இருப்பார்கள். நான்கு புறமும் கடல் என்ற, இயற்கை அரண் கொண்ட ஒரு தீவான எமது நாடு, உலகில் கொரோனாவை முறியடித்த முதல் நாடாக வெற்றிக்கொடி நாட்டி இருக்கும்.

எது எப்படி இருந்தாலும், இந்த வேளையில், சுகாதாரத் துறை மருத்துவ ஊழியர்களுக்கும், இராணுவத்தினருக்கும் முழு ஒத்துழைப்பை வழங்கும் முகமாக, நாம் கொரோனா தடுப்பூசிகளின் வர்த்தக பெயர்களை கேட்டு நிற்காமல் இருப்பதை போட்டுக்கொள்ள வேண்டும். அதன்மூலம் படு வேகமாக பரவி வரும் டெல்டா கொவிட் கிருமிகளில் இருந்து உங்களையும், நாட்டையும் பாதுகாக்க முடியும்- என்றுள்ளது. (ஒ.இ)

# குடும்பநல சுகாதார அலுவலர்கள் 600 பேருக்கு கொரோனா தொற்று

கொழும்பு, ஓக. 9

இலங்கையில் 600 இற்கும் மேற்பட்ட குடும்பநல சுகாதார அலுவலர்களுக்குக் கொரோனாத் தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளது என்று அரச குடும்ப சுகாதார சேவைகள் சங்கத்தின் தலைவர் தேவிகா கொடித்துவக்கு தெரிவித்துள் ளார்.



'நீர்கொழும்பு கொரோனா சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வரும் குடும்ப நல சுகாதார அலுவலர் இடப்பற்றாக் குறை காரணமாக நிலத்தில் மெத்தையை விரித்து சிகிச்சையைப் பெற்று வருகின்றார். சுகாதார சேவையாளர்களைப் பாதுகாப்பதற்கு சுகாதார அதிகாரிகள் சரியான முறைமையை உருவாக்கவில்லை. இது கவலை தரும் விடயமாகும்' என்றார். (ஒ.இ)

# நெஞ்சுவலியால் ஒருவர் சாவு

கொடிகாமம், ஓக. 9

நெஞ்சுவலி காரணமாக வயோதிபர் ஒருவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் நேற்று மாலை உயிரிழந்துள்ளார்.

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த வைரவன் சின்னத்துரை (வயது 75 என்பவரே உயிரிழந்துள்ளார். (ஒ.159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டின்...

இவ்வாறு பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கொரோனாத் தொற்றாளர்களை சிகிச்சை நிலையங்களுக்கு அழைத்துச் செல்வதற்கு போதிய அம்புலன்ஸ் வசதிகள் இல்லையாயின் பிரதேச மட்டத்தில் அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அனைத்து மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.
உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிப்பதால் தொற்றாளர்கள் அனைவரும் தீவிர சிகிச்சைக் கண்காணிப்புக்குள் உட்படுத்தப்பட வேண்டும்.
தொற்று நிலைமை தீவிரமடைந்து வந்தாலும், அதனைச் சமாளிக்கும் வலு எம்மிடம் உண்டு. ஓய்வு பெற்ற சுகாதார அதிகாரிகளை மீண்டும் பணிக்கு அழைப்பதன் ஊடாகவும், முப்படையினரைக் களமிறக்குவதன் ஊடாகவும் நிலைமைகளைச் சமாளிப்போம்- என்றார். (ஒ.22)

## பருத்தித்துறையில்...

மைய நாள்களில் கணிசமான எண்ணிக்கையில் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகிறார்கள்.
இந்த நிலையில், யாழ். மாவட்டத்தின் பல்வேறு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளிலும் பெறப்பட்ட மாதிரிகள் சில, வைரஸின் மரபணு பரிசோதனைக்காக சிறிஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.
இதில் பருத்தித்துறையிலிருந்து அனுப்பப்பட்ட மாதிரியொன்று டெல்டா திரிபு என்பது பரிசோதனையில் தெரிய வந்துள்ளது. பருத்தித்துறையில் அண்மைய நாள்களில் ஆலய திருவிழாக்கள் சுகாதார விதிமுறைகளை மீறி இடம்பெற்று வருவது தெரியவந்துள்ளது. மக்கள் சுகாதார விதிமுறைகளை பேணுவதும், தேவையற்ற ஒன்றுகூடல்களை தவிர்ப்பதும் இந்த அபாயத்திலிருந்து தப்பிக்க ஒரே வழியாகும். எனவே, ஆலய நிர்வாகங்கள் பொறுப்புணர்ந்து நடந்துகொள்ள வேண்டுமென கோரப்பட்டுள்ளது. (ஒ.இ)

## நாட்டை...

னாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.
நாட்டின் கொரோனா நிலவரம் தொடர்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துக் கூறும்போதே இராணுவத் தளபதி இதனைக் குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்த நேரத்தில் நாட்டை முடக்குமாறு சிறிய குழுவினரே கூறி வருகின்றனர். ஆனால், நாட்டின் பெரும்பான்மையான மக்கள் முடக்க வேண்டாம் என்றே கூறுகின்றனர். இதனால் பெரும்பான்மையானவர்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்த்தே நாட்டை முடக்காது இருக்கின்றோம்.
இதன்படி மக்கள் தொடர்ந்தும் பொறுப்புணர்வுடன் நடந்துகொண்டால் நிலைமையைக் கட்டுபாட்டுக்குள் கொண்டு வர முடியுமாக இருக்கும். சுகாதார ஒழுங்கு விதிகளை பின்பற்றி கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்த மக்கள் ஒத்துழைப்பை வழங்க வேண்டும், என்றார்.
மக்கள் பொறுப்பின்றி நடந்து கொண்டதாலேயே கொரோனாப் பரவல் அதிகரித்தது என்று கடந்த காலங்களில் இராணுவத் தளபதி குற்றம் சுமத்தி யிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.22)

## வவுனியாவில்...

சோதனைகளின் அடிப்படையில் வவுனியா மாவட்டத்தில் 39 தொற்றாளர்கள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
குட்செட் வீதியில் 2 பேருக்கும், ஹொரவப்பொத்தானையில் ஒருவருக்கும், தாதியர் விடுதியில் ஒருவருக்கும், மெனிக்பாம் பகுதியில் ஒருவருக்கும், முதலியார்குளத்தில் ஒருவருக்கும், கல்குண்டாமடுவில் ஒருவருக்கும், உளுக்குளத்தில் இருவருக்கும், பத்தினியார் மகிழங்குளத்தில் ஒருவருக்கும், உக்கிளாங்குளத்தில் ஒருவருக்கும், மகாறம்பைக்குளத்தில் ஒருவருக்கும், நேரியகுளத்தில் இருவருக்கும், பிரமனாளங்குளத்தில் ஒருவருக்கும், கூமாங்குளத்தில் ஒருவருக்கும், பட்டானிச்சூரில் ஒருவருக்கும், பட்டக்காட்டில் நான்கு பேருக்கும், கற்குழி பகுதியில் ஒருவருக்கும், காத்தார்சின்னக்குளம் பகுதியில் ஒருவருக்கும், இராசேந்திரங்குளம் பகுதியில் இருவருக்கும், பாரதிபுரம் பகுதியில் ஒருவருக்கும், தோணிக்கல் பகுதியில் இருவருக்கும், புளியங்குளம் பகுதியில் இருவருக்கும், பெரிய உளுக்குளம் பகுதியில் மூவருக்கும், அரசடிக்குளம் பகுதியில் இருவருக்கும், நெடுங்கேணி பகுதியில் மூவருக்கும், வைத்தியர் விடுதியில் ஒருவருக்கும் என 39 பேருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கடந்த 6 நாள்களில் நேரியகுளம் பகுதியில் 73 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். (ஒ.18)

## உயிரிழப்பு 94...

94பேர் தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.
நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 29 ஆயிரத்து 994 ஆக எகிறியுள்ளது. தொற்றால் சாவடைந்தவர்களில் 69 ஆண்களும், 25 பெண்களும் அடங்குகின்றனர்.
இதன்படி நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 5 ஆயிரத்து 111 ஆக அதிகரித்துள்ளது என்றும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ஒ.22)

## 6 மாதக்....

ளின் பின்னர் வவுனியா பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
வவுனியா முருகனூர் பகுதியில் வசித்த தாயும், சிறுகுழந்தையும் காணாமல் போய்விட்டனர் என்று 2015 ஆம் ஆண்டு வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தநிலையில், வவுனியா பொலிஸார் சந்தேகத்தின்பேரில் அந்த நபரை நேற்றுமுன்தினம் கைதுசெய்திருந்தனர். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் அவர் பல்வேறு அதிர்ச்சித் தகவல்களை வெளியிட்டுள்ளார்.
அதன்போதே, தாயையும் குழந்தையையும் தானே கொலைசெய்து தீயிட்டு எரித்தேன் என்று அவர் வாக்கு மூலம் வழங்கியுள்ளார் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.
குறித்த வாக்குமூலத்துக்கமைய அந்த நபரின் வீட்டுக்கு நேற்றுமுன்தினம் சென்ற பொலிஸார் அங்கு விசாரணைகளை மேற்கொண்டனர்.
உயிரிழந்த பெண் யாழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. கைது செய்யப்பட்ட நபர், அந்தப் பெண்ணின் கணவன் என்று பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.
இதேவேளை, கைதுசெய்யப்பட்ட நபரை நீதிமன்றில் முற்படுத்தி விசாரணைகள் தொடரும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-110)

## சந்நிதியான்...

மைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அங்கு பணியாற்றும் ஒருவருக்கு கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
சுகாதார அமைச்சால் நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி நேற்று முன்தினம் அன்னதானம் வழங்கப்பட்டதாகத் தெரிவித்து பொதுச் சுகாதார பரிசோதகரால் வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் சந்நிதியான் ஆச்சிரமம் தனிமைப்படுத்தப்பட்டது.
இந்த நிலையில் அங்கு பணியாற்றுபவர்கள் மற்றும் சந்நிதி முருகன் ஆலயத்தைச் சேர்ந்தோரிடம் மாதிரிகள் பெறப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. அதில் சந்நிதியான் ஆச்சிரமத்தில் பணியாற்றும் 51 வயதுடைய ஒருவருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.
இதேவேளை, சந்நிதியான் ஆச்சிரமம் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் செல்வச்சந்நிதி கலாமன்றத்தால் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி அன்னதானம் வழங்கிவைக்கப்படுகிறது. (ஒ.26)

## சீனி, பருப்பு...

கள் ஒரு வாரத்துக்குள் 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளன.
தற்போது சிவப்புப் பருப்பு கிலோவொன்றின் மொத்த விற்பனை விலையானது 180 ரூபாவாகவும், வெள்ளை சீனி கிலோவொன்றின் மொத்த விற்பனை விலையானது 140 ரூபாவாகவும் காணப்படுகின்றது.
சிவப்பு பருப்பு ஆஸ்திரேலியா மற்றும் கனடாவில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற நிலையில், சர்வதேச சந்தையில் தற்போது விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.
இதன்காரணமாகவே உள்நாட்டுச் சந்தையிலும் விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என அறியமுடிகின்றது.
எவ்வாறாயினும், சீனி இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால் உள்நாட்டுச் சந்தையில் சீனிக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது என அத்தியாவசிய பொருள்கள் இறக்குமதியாளர் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நிஹால் செனவிரட்ன தெரிவித்துள்ளார். (ஒ.22)

## 'போறணைகளில்'...

குக்கூட போதுமான சுடுகாடுகள் இல்லை. வெதுப்பகங்களில் காணப்படும் 'போறணைகளில்' சடலங்களைத் தகனம் செய்யவேண்டிய நிலைமை வரலாம். இவ்வாறு முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
கொரோனாவைக் கட்டுப்படுத்துவது சம்பந்தமாக அரசு முன்னெடுத்து வரும் ஊடகக் கண்காட்சியை நிறுத்திவிட்டு, தொற்று நோயைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
அவசியமான நேரத்தில் நாட்டை மூட நடவடிக்கை எடுக்கவில்லை. ஆபத்து அதிகரித்து வந்த போது, கட்டுப்பாடுகளை கடுமையாக்குவதற்கு பதிலாக கட்டுப்பாடுகளை தளர்த்தினர். நாளாந்தம் ஏற்படும் உயிரிழப்புக்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என விசேட மருத்துவ நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.
நாட்டில் தற்போது முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளைக் கூட இடைநிறுத்திவிட்டு, தொற்று நோயை கட்டுப்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும், என்றார். (ஒ.இ)

## இந்திய மீனவர்களால்...

மாறு யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்கள் வலியுறுத்தினர். கடந்த இரண்டு வாரங்களில் மாத்திரம் நெடுந்தீவு கடற்றொழிலாளர்களுக்கு இரண்டு கோடி 13 இலட்சத்து 28 ஆயிரம் ரூபா இழப்பை இந்தியக் கடற்றொழிலாளர்கள் ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.
யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர் சமாசங்கள் மற்றும் கடற்றொழில் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே மேற்குறித்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.
சுருக்கு வலை, உள்ளூர் இழுவைப் படகு, வெளிச்சம் பாய்ச்சி மீன் பிடித்தல், குழை போட்டு மீன் பிடித்தல் போன்ற சட்டவிரோத தொழில் முறைகளை கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்த வேண்டும் என்ற கருத்தையும் கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் முன்வைத்தனர். மேலும், புரேவிப் புயலால் ஏற்பட்ட பாதிப்புக்களுக்கான இழப்பீட்டைப் பெற்றுத் தருமாறும், நீதிமன்றத்தின் ஊடாக அரசுடமையாக்கப்பட்ட இந்தியக் கடற்றொழிலாளர்களின் படகுகளை விற்பனை செய்து, கிடைக்கின்ற பணத்தை யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கு பகிர்ந்தளிக்குமாறும் இந்தச் சந்திப்பில் அவர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர். (ஒ.இ)

## தொற்றாளருடன்...

நாள்களுக்குள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சிறி ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் நோய் எதிர்ப்பு, தொற்றுப் பிரிவின் பிரதானி மருத்துவர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
யாராவது அருகிலுள்ளவருக்கு தொற்று ஏற்பட்டால், அவர் அடையாளம் காணப்பட்டு 3 முதல் 5 நாள்களுக்குள், அவருடன் பழகிய நெருக்கமான நபர்கள் கொவிட் பரிசோதனைகளை செய்ய வேண்டும். அமெரிக்காவின் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவின் சுகாதார வழிகாட்டியில் இந்த விடயம் கூறப்பட்டுள்ளது.
5 முதல் 7 நாள்களுக்கு இந்த பரிசோதனையை செய்ய வேண்டும் என இதற்கு முன்னர் கூறப்பட்டிருந்தது.
நோய் அறிகுறிகள் தென்படும் பட்சத்தில், அன்டிஜன் பரிசோதனையை செய்வது சிறந்தது. எனினும், நோய் அறிகுறிகள் தென்படாத பட்சத்தில், பி.சி.ஆர். பரிசோதனை செய்வதே சிறந்தது, என்று குறிப்பிட்டுள்ளார். (ஒ.இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

© 2000 Agfa-Gevaert N.V.

# டோக்கியோ ஒலிம்பிக்கில் அமெரிக்கா முதலிடம்

டோக்கியோ, ஓக. 9

டோக்கியோ ஒலிம்பிக் தொடரின் இறுதி நாளான நேற்று ஆதிக்கம் செலுத்தி பதக்கப் பட்டியலில் முதலிடம் பிடித்தது அமெரிக்கா.

தொடரின் நிறைவில் 39 தங்கப்பதக்கங்கள், 41 வெள்ளிப் பதக்கங்கள், 33 வெண்கலப் பதக்கங்கள் என்று 113 பதக்கங்களுடன் அமெரிக்கா முதலிடத்திலும், 38 தங்கப் பதக்கங்கள், 32 வெள்ளிப் பதக்கங்கள், 18 வெண்கலப் பதக்கங்கள் என்று 88 பதக்கங்களுடன் சீனா இரண்டாவது இடத்திலும், 27 தங்கப்பதக்கங்கள், 14 வெள்ளிப் பதக்கங்கள், 17 வெண்கலப் பதக்கங்கள் என்று 58 பதக்கங்களுடன் ஜப்பான் மூன்றாவது இடத்திலும் உள்ளன.

ஆரம்பம் முதலே அமெரிக்கா அதிகமான பதக்கங்களைக் கைப்பற்றிய போதிலும் கூடுதல் தங்கப் பதக்கங்களை வைத்திருந்த அடிப்படையில் சீனா புள்ளிப்பட்டியலில் முதலிடத்தில் இருந்து வந்தது. இறுதி நாளான நேற்று சீனாவையும் விட ஒரு தங்கப்பதக்கத்தைக் கூடுதலாகக் கைப்பற்றி புள் ளிப்பட்டியலில் முதலிடம் பிடித்தது அமெரிக்கா.

எத்தனை பதக்கங்களைக் கைப்பற்றினாலும் தங்கப்பதக்கங்கள் எந்த நாட்டிடம் அதிகம் இருக்கின்றதோ அந்த நாடுதான் முதலிடம் பிடிக்கும் என்பதுதான் ஒலிம்பிக் விதி. (ம)



**மருந்தாளர் தேவை**

புதிதாக ஆரம்பிக்கவுள்ள மருந்தகம் ஒன்றிற்கு மருந்தாளர் (Pharmacist) தேவை.

**தொடர்பு : 077 0812 893**

**பணிப்பெண் உடன் தேவை**

வவுனியா வைரவப்புளியங்குளத்தில் தங்கி இருந்து வீட்டுவேலைகள் செய்வதற்கு 50 தொடக்கம் 60 வயதிற்குட்பட்ட பணிப்பெண் ஒருவர் உடன் தேவை.

(சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்)

**தொடர்பு : 077 993 5344**

# பாரிஸ் செயின்ட் ஜேர்மனில் மெஸ்ஸி நாளை இணைவு

## அவருக்காக ஈபிள் ஒளிரும்

**பாரிஸ், ஓக. 9**

**பிரபல கால்பந்தாட்ட வீரரான லயனல் மெஸ்ஸி கடந்த 21 ஆண்டுகளாக தான் விளையாடிவந்த பார்சிலோனா கழகத்தில் இருந்து விலகியுள்ள நிலையில், அவர் அடுத்ததாக பிரான்ஸின் பாரிஸ் செயின்ட் ஜேர்மனில் இணைவார் என்று கருதப்படுகின்றது.**



மெஸ்ஸி பார்சிலோனாவில் இருந்து பிரிந்த பின்னர் அடுத்ததாக அவர் ஒப்பந்தமாவதற்கு வாய்ப்புக்கள் உள்ள கழகமாக இரண்டு கழகங்கள் அடையாளப்படுத்தப்பட்டன. ஒன்று பிரான்ஸின் பாரிஸ் செயின்ட் ஜேர்மன், இன்னொன்று இங்கிலாந்தின் மன்செஸ்டர் யுனைற்றெட்.

மன்செஸ்டர் யுனைற்றெட் மெஸ்ஸியை ஒப்பந்தம் செய்யும் எண்ணமில்லை என்று அறிவித்துள்ள நிலையில், அவரை பாரிஸ் செயின்ட் ஜேர்மன் கழகம் ஒப்பந்தம் செய்வது கிட்டத்தட்ட முடிவாகியுள்ளது.

இது தொடர்பான இரு தரப்புப் பேச்சுக்களும் நிறைவடைந்துள்ளன. நாளை மெஸ்ஸிக்கும் பாரிஸ் செயின்ட் ஜேர்மனுக்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்தாகும் என்று கருதப்படுகின்றது.

மெஸ்ஸி பிரான்ஸ் கழகத்துடன் இணைவதையடுத்து பாரிஸ் நகரில் உள்ள ஈபிள் கோபுரத்தில் மெஸ்ஸியின் ஒளிப்படம் ஒளிரவிடப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 27.03.1936 மறைவு 02.08.2021

எமது பாடசாலைக்கு இரு மாடிக்கட்டடம் ஒன்றை கட்டி வழங்கியவரும் இப்பாடசாலையின் பழைய மாணவருமாகிய

**திரு.சுப்பிரமணியம் கதிர்காமநாதன்**

அவர்களின் அன்புத் தாயார்

**சுப்பிரமணியம் அன்னலட்சுமி**

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலை சமூகம்**

**யா/ ஆயிலி சிவஞானோதய வித்தியாலயம்**

**காரைநகர்.**

### பார்சிலோனாவிலிருந்து

# கண்ணீர் மல்க நேற்று விடைபெற்றார் மெஸ்ஸி

பார்சிலோனா, ஓக. 9

ஸ்பெயினின் பார்சிலோனா கழகத்தில் இருந்து நேற்று கண்ணீர் மல்க விடைபெற்றார் அந்த அணியின் முன்னாள் தலைவரான மெஸ்ஸி. மெஸ்ஸி கடந்த 21 ஆண்டுகளாக பார்சிலோனாவுக்காக விளையாடி வந்தார். கடந்த பருவகாலத்தில் பார்சிலோனா கழகத்தின் தலைவராகவும் செயற்பட்டார். இந்த நிலையில், மெஸ்ஸி பார்சிலோனாவை விட்டு வெளியேறுகின்றார் என்ற தகவல் பார்சிலோனா கழகத்தால் கடந்த வாரம் அறிவிக்கப்பட்டது.



அடுத்த பருவகாலம் விரைவில் ஆரம்பிக்கவுள்ள நிலையில் மெஸ்ஸிக்கான பிரியாவிடை நேற்று பார்சிலோனா கழகத்தால் நடத்தப்பட்டது. அதில் கண்ணீர் மல்கி அழுதார் மெஸ்ஸி. நீண்ட நேரம் அவர் அழுதுகொண்டே இருந்தார். இறுதியில் தன்னைச் சுதாகரித்துக்கொண்டு, '21 ஆண்டுகளாக இந்தக் கழகத்துடன் இணைந்திருந்த பயணம் முடிவுக்கு வந்தது' என்று தெரிவித்தார். (ம)

# மரண அறிவித்தல்



தோற்றம் 19 . 12 . 1955

மறைவு 08 . 08 . 2021

**செபஸ்ரியாம்பிள்ளை றூபஸ் விக்ரர்**

(ஓய்வுபெற்ற மாநகரசபை ஊழியர்)

குருநகரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்ரியாம்பிள்ளை றூபஸ் விக்ரர் (ஓய்வுபெற்ற மாநகரசபை ஊழியர்) நேற்று (08.08.2021) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார் என்பதை அறியத்தருகின்றோம்.

**குடும்பத்தினர்**

9/2, தண்ணீர்தாங்கி,
4 ஆம் குறுக்குத்தெரு,
குருநகர், யாழ்ப்பாணம்.

றா.யதுசன் - 077 405 4791
செ.யூலன் - 077 036 6399
இ.ஜெயபிரகாஷ் - 077 541 9933

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.08.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.